உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0
R. No. M. 3606 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணு

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹு கார்த்திகை-மீ 10-உ (25—11—1934) | மலர் 14.

## சமத்துவ பேரிகை.

(சிறுகுடி தோழர் எஸ். ஆர், லிங்கன் பாடியது.)

"கற்பில் சிறந்த எந்தன் கனியே" என்னும் மெட்டு.

பல்லவி

சமத்துவக் கொடிபிடித் திடுவோம்—
அதை நடுவோம் மனம் மகிழ்வோம்
தினம் புகழ்வோம். (சமத்துவக்)

சரணங்கள்

1. உலகெலாம் தொழிலாளி உழைத்தும்பட் டினியே
ஒண்டக் குடிசையின்றி உடலென்றும் பிணியே
கதிரவன் மழையிருள் காற்றேடு பனியே
கலங்குற வாடிமனம் மெலிந்தே
உடல்நலிந்தே உயிர்பிரிந்தே
விடல்உணர்ந்தே (சமத்துவக்)

2. பலபேர் உணவையொரு முதலாளி என்போன்
பறித்துத்தின் றுகொழுப்பான் பன்றிகள் போன்று
செருக்கொடிவ் வுலகில் வாழ் துருக்குணப் பேய்கள்
செத்து மடியும்காலம் என்றே
சுகம் என்றே நலம்உண்டோ
அழிவன்றே (சமத்துவக்)

3. மனிதனின் அறிவையும் பொருளையும் கவர
மதத்தின் பெயரால்பல புரோகிதர் அந்தோ!
கற்பனைக் கதைகளைக் கண்டதைப்போல
கயவர் எழுதிவைத்தார் கடிதில்
இந்தவுலகில் மாயவலையில்
பொய்யாம் மறையில் (சமத்துவக்)

4. எங்கும் சமரசம் முழங்கிடும் போது
எங்கும் மனவமைதி நிலவிடக்காண்போம்
இன்று முதல்காம்பொது லக்ஷ்யபே ரிகையை
இரைந்துகொட் டயுவர்காள் நீரும்
விரைந்துவாரும் மனம்தேரும்
கலிதீரும் (சமத்துவக்)

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 |
| விவாக விடுதலை | 0-4-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 |
| மனித உற்பவம் | 0-8-0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| The Right of Temple Entry (English) | 1-0-0 |
| The Crux of the Indian Problem (English) | 1-0-0 |
| உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| சாமிகளின் அடிமை | 0-12-0 |
| லோகல்போர்டுஆக்ட்(சென்னை) | 2-0-0 |
| பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| பெண்ணுரிமைக் கீதங்கள் | 0-1-0 |
| சமதர்மக் கீதங்கள் | 0-0-6 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.


## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.
கௌரவ ஆசிரியர்:—
S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.
ஆசிரியர்:—
சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணா ஒன்று.
விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவரம்.

### "சமதர்மம்,"

சிரியர்:—
வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும்,சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை
ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடுபடுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோரும் வெளிவருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0
மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.
—0—

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டுஇரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0
விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்

### விதவையர் விடுதலை முழக்கம்.

இது விதவைகள்படும் கொடுமைகளையும், அவர்களின் விடுதலைக்குரிய வழிகளையும் விளக்கும் இனிய வர்ன மெட்டுகளாலமையப்பெற்றது. 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக் போஸ்டிலனுப்பப்படும். விலை அணா ½.
விலாசம்:—க. அ. புன்னைமுத்து கல்லூரணி, அருப்புக்கோட்டை வழி

### ஏஜண்டுகள் தேவை.

நமது "பகுத்தறிவு" வாரப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு,

1. பொன்மலை
2. சாக்கோட்டை
3. திண்டுக்கல்
4. சென்னை
5. கேலார் தங்கவயல்.

முதலிய இடங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.
மானேஜர், "பகுத்தறிவு" ஈரோடு.

# மதமொழிக்கும் உலகப்புரட்சி.

## ஜோசப் மெக்காபி எழுதியதின் மொழிபெயர்ப்பு.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நான் பள்ளிக்கூடங்களைப்பற்றி கூறினேன். பள்ளிக்கூடங்கள் நகரெங்கும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏழைகளான மெக்ஸிகோ தொழிலாளிகளின் கேவலமான குடிசைகளிலும் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. மிகப்பெரிய உயர்தரக்கலாசாலைகள் அங்குமிங்குமாகப் பல இருக்கின்றன. சிறிது தூரத்திற்கப்பால் சர்வகலா சங்கம் இருக்கிறது. பட்டணத்திற்குள்ளே பெரிய பொது ஜனப் புத்தகசாலை இருக்கிறது. மின்சாரத்தால் ஒலி பெருக்கி அனுப்பும் நிலையங்களின் இரும்புக் கோபுரங்கள் இங்கு மங்கும் காணப்படுகின்றன. புதிய சகாப்தத்தின் இரண்டாவது லட்சணம் இது தான். உலகம் இதற்கு முந்தி எப்போதும் பெற்றிராத ஞானத்தை நாம் பெற்றிருக்கிறோம். அந்த ஞானத்தை உரியவாறு பரப்ப இயந்திர ரீதியான ஏற்பாடு இருக்கிறது. இது போன்ற முறையும் உலகத்தில் இதற்குமுந்தி எப்போதும் இருந்ததில்லை.

பழையகாலத்தில் ப்ளேட்டோ என்ற ஒருவர் இருந்தார். அவர் மிகப் பெரிய நூலாசிரியர், அவர் மிகப்பெரியசிந்தனை வீரர்களில் ஒருவர். அவருடைய வாழ்நாளில் அவருடைய வினாவிடைகளில் எதையும் எத்தனை கிரேக்கர்கள் படித்தார்கள்? சில நூறுபேர்தான் இருக்கலாம் என்று நான் கூறுவேன். ஆனால், இப்பொழுது..........சில வருஷங்களுக்குமுன்பு "ரிட்டில்ஆப்தி யுனிவர்ஸ்" என்னும் புஸ்தகத்தை மொழிபெயர்த்தேன். அதன் அசல் ஹாக்கல் என்பவரால் எழுதப்பட்டது. சில வருஷங்களில் ஐந்து லட்சம் மொழிபெயர்ப்பு பிரதிகள் என்னால் விற்கப்பட்டன. நான் எழுதிய மொழிபெயர்ப்பை ஆமோதித்து, எதிர்ப்புகளை எதிர்த்து நான் ஒரு புஸ்தகம் எழுதினேன். சில மாதங்களுக்குள் அப்புத்தகத்தில் ஐம்பதாயிரம் பிரதிகள் விலையாயின. "அவுட்லைன் ஆப் ஹிஸ்டரி" என்னும் பெரிய புஸ்தகத்தில் ஹெச். ஜி. வெல்ஸ் என்பவர் லட்சம் பிரதிகளுக்கு அதிகமாகவே விற்றார்.

அறிவைப் பரவச்செய்வதற்கு மலிவான அச்சு ஒன்றே நமக்குச் சாதனமானது என்று நாம் நினைத்தோம். திடீரென்று அதியற்புதமான புதியஇயந்திரம் அதற்கென்று தோன்றிற்று. அதுவே ரேடியோ வென்னும் ஒலிபரப்பி. லண்டன் நகரத்தில் ஏதோ மூலையிலுள்ள ஒரு சிறு அறையில் இருந்து கொண்டு பத்து லட்சம் பேர்களுக்கு உலகங்களின் பிறப்பு இறப்பு என்ற பெரிய கதையைச் சொல்லியிருக்கிறேன். வின்னிபெக் என்னும் ஊருக்கு அருகாமையிலுள்ள ஒரு அறையில் இருந்து கொண்டு பரிணாமம் என்னும் விஷயத்தைப்பற்றி மத்திய கானடாவின் குடியானவர்களின் மொத்தத்தில் பாதித் தொகையினரோடு பேசினேன், அவர்கள் வியப்படைந்தார்கள். கல்வி சம்மந்தமான மின்சார வேலைகள் தற்காலம் இளம்பருவத்திலேயே இருக்கின்றன. சீக்கிரமாக பேசுந்திறமை பெற்றவர்கள் சொல்லப்படுவதற்குத் தம்மிடம் பெரிய உண்மைகள் வைத்திருந்தால் டென்வர் அல்லது சிக்காகோ என்னும் இடத்திலிருந்து யுனைட்டெட் ஸ்டேட்ஸ் முழுவதும் பேசலாம். அங்கிருந்தே மெக்ஸிகோ கடைசியிலுள்ள ஜனங்களிடத்திலும், பிரஸீல் பெருவுக்குக் கேட்கும் படியும் பேசலாம். உலகம் முழுவதிற்கும் ஒரே பாஷை ஏற்படும். அப்போது, விஞ்ஞான சாஸ்திரம், சரித்திரம், சமுதாய நூல்கள் முதலியவைகளின் உண்மைகள் இப்பிரபஞ்ச முழுவதும் சுழன்று வரும். இது அளவுக்கு மிஞ்சிய விஷயமா? நமது காலத்தின் வெறும் இயந்திர ரீதியான தோற்றமா? மேலே சொல்லப்பட்ட முக்கியமான விஷயங்களைக் காதால் கேட்காதவர்களே லட்சாதி லட்சம் இருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்லலாம். உங்களுக்கு அப்படிப்பட்ட நம்பிக்கையும் இருக்கலாம். அச்சேதிகளை அவர்களுக்குத் தெரிந்த ஒரு பாஷையில் சொன்னால் அவைகளை அவர்கள் கேட்பார்கள் என்று நம்புகிறேன். விஞ்ஞானப் பிரசங்கத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் என் முன்னிலையில் இருந்து ஆழ்ந்து கேட்பவர்கள் மூவாயிரம் ஜனங்களிருப்பார்கள். என் பிரசங்கத்தின் போதெல்லாம் அத்தனை பேர் இருப்பதுண்டு. ஆனால் விஷயத்தின் மற்றொரு பக்கத்தையும் பற்றி கவனிக்க வேண்டும்.

அறிவு என்பது நுட்பமாய்ப்பரவுகிறது. புதிய அறிவு என்ற விழிப்பு பெறாத மக்களிடத்திலும் அது உற்சாகத்தை உண்டாக்குகிறது. நம் தலைமுறையில் ஒரு புதிய உற்சாகம் இருக்கிறது. எல்லாப் பிரமாணங்களையும் நாம் மறுக்கக் கூடியவர்களாகவே இருக்கிறோம். இறந்து போனவர்களுடைய பிரமாணங்களை நிச்சயமாகவே மறுக்கிறோம். ஆழ்ந்த அறியாமையில் வாழ்ந்து வந்த தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு நமக்காக சட்டம் வகுக்க உரிமையில்லை. அறியாமை மிகுந்த காலங்களில் செய்யப்பட்ட மதக் கோட்பாடுகள் இருட்டறைகளில் வரையப்பட்ட உருவப்படங்களாகும். உலகத்தில் நவீன அறிவு உதயமாவதற்கு முன்பு உண்டாக்கப்பட்ட எல்லா மதக்கோட்பாடுகளையும், ஸ்தாபனங்களையும் நாங்கள் புனராலோசனைக்குக் கொண்டு வரப்போகிறோம்.

அது நியாயமான காரியந்தான். "புனராலோசனை செய்யுங்கள், தள்ளிவிட வேண்டாம்" என்றே நான் சொல்லுகிறேன். ஒழுக்கச் சட்டமாயினும், குடிவாழ்க்கைச் சட்டமாயினும், சித்தாந்தமாயினும், அனுபவமாயினும் அவைகளில் சிலாக்கியமானதையும் உபயோகமுள்ளதையும் நாம் வைத்துக் கொள்வோம். பெற்றோர்களிடமிருந்து தெரிந்துகொண்ட விஷயங்களைப் பற்றி மறுபடியும் சிந்தனை செய்து பார்க்க மறுப்பவர்கள் நியாயங் கெட்டவர்களேயாவார்கள். தன் நம்பிக்கையைப் பரீட்சிக்க வேண்டுமென்ற கருத்துடையவர்களால் எழுதப்பட்ட ஒரு பக்கச் சார்பான இலக்கியத்தை மட்டும் உபயோகிக்கும் ஒருவனும் நியாயங்கெட்டவன் தான். புதிய தலைமுறையில் மக்கள் இரண்டு பக்கத்து விஷயங்களையும் படித்தறிந்து தாங்கள் தங்களுடைய சொந்தத் தீர்மானத்திற்கு வரும் உரிமையைக் கேட்கிறார்கள்.

மக்கள் க்ஷேமம் கருதப்படும் உலகத்தில் தான் புதிய இயக்கத்திற்கு மிகப்பலமான ஆதரவு இருக்கிறது. அங்கு ஆதரவு தவறிருக்கும். முற்காலத்திய மூடநம்பிக்கைகளிலும் பொய்த் தோற்றங்களிலும் எத்தனை வகைகளை நாம் சென்ற 50 அல்லது 100 வருஷங்களில் புறம்பே தள்ளிவிடும்படி இருந்திருக்கிறது! உலகம் அவைகளை ஒதுக்கித்தள்ள எவ்வளவு சந்தோஷத்தை யடைந்திருக்கும்!!

அதனால் உலகம் எவ்வளவு நன்மையை அடைந்திருக்கும்!!! பிராட்டஸ்டண்ட் அமெரிக்கர்கள் தான் இவ்வுண்மையை முதன் முதலாகக் கண்டிருக்க வேண்டும். அவர்களுடைய முன்னோர்கள் தான் போப்பின் கொடுங்கோன்மையை ஒழித்தார்கள். தெய்வீக சக்தி தன்னிடம் உண்டு என்ற போப்பின் ஆர்பாட்டங்களைக் கண்டு நகைத்தனர். அவர்கள் மத்திய காலத்து கிறிஸ்து மதத்திலிருந்த சந்நியாச முறைகளைத் தள்ளிவிட்டனர். அவர்கள் பாதிரிகளாயினும் விவாகம் செய்து கொள்ளலாமென அநுமதித்தனர். அவர்கள் ஒரு ஆயிரம் வருஷங்களுக்கு உலகம் முழுதும் மதத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் என்று நம்பி வந்தார்கள்.

பிறகு அவர்கள் அரசாங்கத்தின் மூட நம்பிக்கைகளில் தலையிட்டு, அரசர்களின் தெய்வீக உரிமை எனப்பட்டதைத் தகர்த்தெறிந்தார்கள். அவர்கள் கிறிஸ்தவ ஐரோப்பா குற்றமுடையதென்றும், கிறிஸ்து மதமில்லாத கிரீஸ், ரோம் ஆகியவை தவறில்லாதவையென்றும் கூறினார்கள். மக்களின் சரியான அரசியல் முறை குடி அரசாகும். பின் அவர்கள் பல காலங்களாக கிறிஸ்துவ கோவில்கள் ஆதரித்து வந்த அடிமைச் சங்கிலிகளை உடைத்தெறிந்தார்கள். ஒவ்வொன்றாக பழைய காலத்து ஆயிரம் மூட நம்பிக்கைகளை அழித்து வந்தார்கள். சமுதாயம், வைத்தியம், சிக்கனம், அரசியல், தொழில், குடித்தனம் முதலிய எல்லாவற்றிலுமிருந்த மூட நம்பிக்கைகளை அவர்கள் ஒழித்து வந்தார்கள், பத்தொன்பதாவது நூற்றாண்டில் கவர்ச்சையற்றபாரம்பரையமும், மதக்கோட்பாடுகளும், மூட நம்பிக்கைகளுமே இருந்தன. சுயேச்சை நாடு ஐரோப்பாவில் தலை நிமிரலாயிற்று. அது இறந்தவர்களுக்கிருந்த பெருமையை ஒழித்து தன் சொந்த விஷயங்களுக்குத் தானே அதிகாரி என்பதை ஸ்தாபிக்கும் தைரியத்தைப் பெற்றது.

ஐரோப்பா அதை மெதுவாய் பின்பற்றியது. உலகம் முழுதுமே மூட நம்பிக்கையில் மூழ்கியிருக்கிறது. துருக்கி தேசத்தினர் தங்கள் ஜாதியின் புனித பாரம் பரையத்தைக் கிழித்தெறிந்தார்கள். சீனர்கள், தங்கள் சிகையின் பன்றி வாலையும், அது சம்பந்தமான எல்லா அடையாளங்களையும் வெட்டி எறிந்தார்கள். எகிப்தியர்களும் இந்துக்களும் மதச் சுதந்திரத்திற்கும், சமுதாய சுதந்திரத்திற்கும், அரசியல் சுதந்திரத்திற்கும் போராடி வருகிறார்கள். ஆப்ரிகா நீக்கிரோவர்கள் குடி அரசை ஸ்தாபிக்க நோக்கம் கொள்ளுகிறார்கள். மெக்ஸிகோ கோவிலை எதிர்க்கிறது. அங்கு லட்சம் மாதா கோவில் பிரசங்க மேடைகள் காலியாகக் கிடக்கின்றன.

ஒரு புதிய சகாப்தம்! இவ்வுலகத்தில் இதைப்போல ஒரு சிறிதும் எக்காலத்தும் இருந்ததில்லை. மாஸ்கோவிலோ, அல்லது ஷாங்கேயி

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# வெங்காயத்தின் விசேடம்

## அழகையும், ஒளியையும் கொடுப்பது.

இத்தேசத்தில் பொதுவாக பல வியாதிகள் தோன்றி வருகின்றன. பொதுவாக அவைகள் உணவின் பாகுபாடு முறை தெரியாததினால் இத்தகைய வியாதிகளுக்குள்ளாகின்றார்கள். அவர்களுக்குப் பின்பற்ற வேண்டிய சில குறிப்புகளை எடுத்துக் காட்டுவாம். ஆட்டிறைச்சி அதிகமாகச் சாப்பிடுவதை நமது தேசத்து மக்கள் நீக்க வேண்டும். முட்டை, மீன், எடு முதலியவைகளை அடிக்கடி அளவாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆட்டிறைச்சி முதலான பிரொடெயின்ஸ் சத்துள்ள ஆகாரங்களில் யூரிக் ஆஸிட் என்ற ஒருவகை திராவகம் அடங்கி இருக்கிறது. அத்திராவகம் பெரும்பாலும் ரத்தத்தில் கலந்து விடுகிறது. சரியாக ஜீரணமாகாவிட்டால், அத்திராவகம் தேகத்திற்குக் கெடுதலையே விளைவிக்கச் செய்கிறது. மிதமிஞ்சிய ஆகாரத்தால் இத்திராவகம் ரத்தத்தைக் கெடுக்கிறது. நாம் அளவாகச் சாப்பிட்டாலித்திராவகம் ஒன்றுஞ் செய்யாது. சிகப்பாயிருக்கும் மாமிசத்தைக் கூடியவரையில் நாம் தள்ள வேண்டும். கோழிக்குஞ்சு, மீன், சிறிதளவாக எடுத்துக் கொள்ளவேண்டும் இவைகள் நமது தேகத்தைப் பாதிக்காது. நவதானிய வகைகளையும், மரக்கரிபதார்த்தங்களையும், பழவகைகளையும் நாம் எவ்வளவு வேண்டுமானாலும் எக்காலத்திலும் எடுத்துக் கொள்ளலாம். நாம் மரக்கரி ஆகாரங்களை எடுத்துக் கொள்வதால், மலச்சிக்கல் முதலிய வியாதிகள் நம்மிடம் அணுகாது. சோகை பிடித்திருப்பவர்கள் பல வீனமாயிருப்பவர்கள் முதலிய இவர்கள் தங்களுடைய ரத்தத்தைச் சுத்தஞ் செய்துகொள்ள வேண்டியதவசியமாகும். அதிகஞ் சாப்பிட்டால் அதிகம் ரத்த விருத்தி உண்டாகுமென அவர்கள் தப்பாக நினைத்துவிடுகின்றனர். எப்பொழுதும் சாப்பிடுகிற அளவில் சாதாரணமாக, எடுத்துக்கொள்ளும் ஆகாரத்தினால்தான் ரத்த விருத்தியுண்டாகும். ரத்தம் சுத்தமாக இல்லாவிட்டால், நாம் சாப்பிடுகிற ஆகாரம் ஜீரண சத்துக் குறைந்து விஷமாக மாறுகிறது. நமது குடலில் எத்தனையோ கிருமிகளிருக்கின்றன. சில சமயங்களில் அவைகள் குடலுக்குள்ளேயே இறந்து விடுகின்றன. இங்ஙன மிறந்துவிட்ட கிருமிகளை விட்டு விட்டால், தேகத்திற்கு அளவற்ற கேடுகள் உண்டாகும். அதைப் போக்க நாம் அடிக்கடி பேதிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். நம்மால் முடிந்த வரையில், கீரை வகைகளைச் சாப்பிட வேண்டும். இத்துடன் நாம் இரும்பு கலந்த திராவகத்தை எடுத்துக் கொள்ளல் வேண்டும். இங்ஙனம் எடுத்துக் கொள்வதால், இரும்புச் சத்து ரத்தத்துடன் கலந்து சுத்தமாக்குகிறது.

நரம்புத் தளர்ச்சியால் வருந்திக் கொண்டிருக்கும் மக்களுக்கு விடமின் பி என்னும் சத்துக் கலந்த ஆகாரங்கள் அவசியமாகும், அச்சத்து ரொட்டி, மார்மைட் தானிய வகைகள் காட்லீவர் என்னும் மீன் எண்ணெய்முதலியவற்றுள் அதிகமாக இருக்கின்றன. விடமின் பி என்னும் சத்து நம் தேகத்திற்கு இன்றியமையாதது. நரம்புத் தளர்ச்சிகளை யறவே போக்கடித்து நரம்புகளுக்குப் புதிய சத்துகளை அது உண்டாக்குகிறது. மலச்சிக்கலாலும் சிறு நீர் பாதையாலும் கஷ்டப் படுகின்றவர்கள் அடிக்கடி பழவகைகளைச்சாப்பிட வேண்டும். குடலைச் சரிவர சுத்தமான நிலையில் இவைகள் பாதுகாக்கின்றன. மீன் எண்ணை, வெண்ணை, பால் முதலியவைகளும் நரம்புகளுக்குப் பலத்தையுண்டாக்கச் செய்கின்றன.

கூடுமான வரையில் தட்டுகளில் சாப்பிடுவதை நிவர்த்திக்க வேண்டும் அவைகளால் நாட்டில் பல வியாதிகள் தோன்றி வருகின்றன. சாதாரணமாக இடை வேளைப் போஜனத்தில், பக்குவஞ் செய்யப்பட்ட உருளைக் கிழங்கு, பிஸ்கட்டுகள், ஸ்விஸ் தேசத்திய வெண்ணை இவைகளையே உபயோகிக்க வேண்டும். ஆனால் நமது நாட்டிற்கேற்றவாறு, இங்கு காணப்படும், பழவகைகள், மெலிந்த இனிப்புப் பண்டங்கள் முதலிய இவைகளையே எடுத்துக் கொள்ள வேண்டும். சிலர் இடைவேளைப்போஜனத்தில் நாக்கின் ருசிக்கு அடிமைகளாகி, அளவற்ற பலகாரங்களையும், பானங்களையும் உபயோகப் படுத்துகின்றனர். இதனால் அவர்கள் வழக்கமாகச் சாப்பிடும் ஆகாரத்தில் விருப்பமில்லாதும், வேளை தவறியும் சாப்பிடுகின்றனர். அதனால் பலவித நோய்களையும் வருவித்துக் கொள்கின்றனர்.

### வாயைச் சுத்தஞ்செய்தல்.

பிரதி தினமும் நாம் நம்முடைய வாயை குறைந்ததுமூன்று தரமாவது சுத்தஞ் செய்யவேண்டும். வாரத்திற்கிருமுறை பொராக்ஸைட் கலந்த ஜலத்தால் கொப்பளித்து உமிழ வேண்டும். அதனால் வாய் சுத்தமடைவதுடன், பற்களும் சுத்தமடைந்து வெளுக்கின்றன. ஒவ்வொருநாளும் லெமன் சாறு கலந்த பானத்தை யருந்துவது விசேடமாகும். நாம் சாப்பிட்ட பிறகு நமது வாயைக் கொப்பளித்துச் சுத்தமாக்க வேண்டியதவசியமாகும். எ. டி. கலேக்னி என்ற மருந்திலிருந்து சில துளிகள் கலந்து ஜலத்தினால் வாயைச் சுத்தம் செய்தால், சுவாசக் குழாய்கள் சுத்தமடைந்து, மூச்சுவிடவும் சுலபமாக இருக்கும்.

சாப்பிட்ட பிறகு நமது வாய் ஓர் வகையான சுவையைப் பெற்றால், போராஸிக் திராவகத்தை, வெண்ணீரிற் கலந்து நாம் கொப்பளிக்க வேண்டும்.

### வெங்காயம் அவசியமா?

பழங்களையும், ரசங்களையும் ஆகாரத்துடன் சேர்த்துக் கொள்ளப்படாதென மறுக்கும் சில பெண்களிருக்கின்றனர். அப்பேர்ப்பட்டவர்களுக்கு அடியிற் காட்டிய முறைகள் பயன்படத் தக்கவையாகும். காலை ஆகாரத்திற்கு, சிறிது வேகவைத்த முட்டை, வருத்த மாமிசம், பால் சேர்ந்தபானங்கள், இவைகள் பொருத்தயானவைகளாகும். நன்றாக வேகவைத்த முட்டைகள் பயன்படா. அவைகளில் கொழுப்புக் குறைந்து விடுகிறது. காபி பானத்தில் ஓர் வகைத் திராவகமிருக்கிறது. ரத்தத்தை அந்த திராவகமே கெடுக்கிறது. பால் சேர்த்தால் அத்திராவகத்தின் சக்தி குறைந்து விடுகிறது. ஆதலால் பால் சேர்ந்த காப்பியேசாப்பிட வேண்டும். இடைவேளைப் போஜனத்திற்கு, வெங்காயச் சாம்பார் மிக நல்லது. அத்துடன் சிறிது சிற்றுண்டியும் சாப்பிடவேண்டும். ஆனால் அளவு இருத்தல் வேண்டும். வெங்காய ரசம் நமது தேகத்தின் தோலைச் சுத்தமாக்குவதுடன், வசீகரமாகவும் செய்கிறது. வெங்காய சாம்பருடன்சிறிது வெண்ணை கலந்த ரொட்டியை எடுத்துக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் சிறிது பழ ரசங்களை உட்கொள்ளவேண்டும். பிற்பகலில் எப்பொழுதும் தேயிலைப் பானத்தை யருந்தவேண்டும்.

### வெங்காயம் அழகையளிக்கும்.

வெங்காயம் அதிகம் சாப்பிடுவதால் தேகத்திற்கு அலாதியான வசீகரத்தைக் கொடுக்கின்றதெனக் கூறுவதால் சிலர் சீற்றமடையலாம். ஆயினும் இது உண்மைதான். அதனுடைய சுவை மாறா வண்ணம் அதைப் பக்குவமாக வேக வைக்கவேண்டும். உள்ளே யிருக்கும் கிருமிகளை வெங்காயம் போக்கடிக்கிறது. நோய்களுக்குஓர் முரிப்பைப்போல வெங்காயம் தேகத்துள் வேலைசெய்கிறது. விடக்கிருமிகளைப் போக்குவதற்கு வெங்காயங் காரணமாக இருப்பதால், தேகத்தின் தோலில் புதியஒளியும் வனப்பும்உண்டாகின்றன. பிரதிதினமும் பக்குவமாக வேகவைத்த வெங்காயங்களைச்சாப்பிட்டு வரவேண்டும்; இங்ஙனம் மூன்று வாரம் வரையில் நாம் சாப்பிட்டு வந்தபின்னர், நமது தேகத்தைக் கவனித்தால், புதுவிதமான இயற்கைஒளியும், பளபளப்பும்நமது தோலில் தோன்றுகின்றன. மூன்று வாரத்திற்கு முன்னிருந்ததைக் காட்டிலும் நமது உடலில் மாறுபாடு தோன்றும். வெங்காயங்களைப் பக்குவமாக வைப்பது எங்ஙனமெனில், வெந்நீரில், வெங்காயங்களை முதலில் இரண்டு அல்லது மூன்று தரம் போட்டுக் கழுவ வேண்டும். பின்னர், தண்ணீரைக் கொட்டி விட்டு வேறு தண்ணீரை ஊற்றிச் சுத்தஞ் செய்ய வேண்டும். அவைகள் மிருதுவாகிற வரையில் கொதிக்க வேண்டும், கொஞ்சம்உப்பு, மிளகுத்தூள் இவைகள் கலந்து நாம் சாப்பிட வேண்டும். அத்துடன், ரொட்டியும், வெண்ணெயுங் கலந்து உட்கொள்ள வேண்டும். அல்லது மரக்கரி பதார்த்தங்களுடன் கலந்தாவது சாப்பிடவேண்டும்.

### குழந்தைகளின் பற்கள்.

குழந்தைகட்குப் பல் முளைத்தபொழுது, மெல்லுவதற்குமுயற்சி செய்கிறது. எளிதில் ஜீரணிக்கும் ஆகாரத்தை அவர்களுக்கு அளித்தல் வேண்டும். அக்குழந்தைகளுடைய ஆகாரம் முடிந்தபிறகு, பழுத்த ஆப்பிள் பழத்தை அளித்தால், அதை மென்றுதின்னும். அதனால் குழந்தைகளுடைய பற்கள் பிரகாசமடைந்து சுத்தமடைகின்றன. முதலில் சிறிய கந்தையைத் தண்ணீரில் நனைத்துக் குழந்தையின் பற்களை மெதுவாகத் துடைக்கவேண்டும். 8 பற்கள் முளைத்தபின்னர், சிறிய பல் பிரஷை உபயோகப்படுத்தவேண்டும். பற்களின் முன் பக்கமும், பின் பக்கமும், மேலும்கீழும் இந்த பிரஷினால் சுத்தமாக்க வேண்டும். சுத்தஜலமே வாயைக் கொப்பளிப்பதற்கு அனுகூலமாகும். காலையில் நாம் பற்களைச் சுத்தமாக்குவது எங்ஙனம் முக்கியமாகக்கருதுகின்றோமோ அங்ஙனமே இராத்திரி காலத்திலும் குழந்தைகளின் பற்களைச்சுத்தமாக்க வேண்டும்.

---

### தோழர் பண்டித ஆனந்தரின் விலாசம் மாற்றம்.

சென்னை தங்கசாலைத்தெரு 221ல் நடைபெற்று வந்த ஆனந்தரின் வைத்தியசாலை, தரும வைத்தியசாலை, வாசகசாலை முதலியவைகள் சுகாதாரத்தையும் இட வசதியையும் கோரி சென்னையை அடுத்துள்ள அடியிற் கண்ட விலாசத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. தோழர்கள் இனி இந்த விலாசத்திற்கே வரவும், கடிதம் எழுதவும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஆனந்தரின் வைத்தியசாலை,
ராகவையா ரோடு,
தியாகராயநகர்,
சென்னை.

# சோவியத் சர்வாதிகாரி ஸ்டாலினுக்கும் உலக அறிஞர் எச். ஜி. வெல்சுக்கும்

# சம்பாஷணை.

பிரபல ஆங்கில நூலாசிரியராகிய திரு. எச். ஜீ. வெல்ஸ் சமீபத்தில் மாஸ்கோ நகரத்திற்கு விஜயம் செய்து சோவியத் ருஷ்யாவின் சர்வாதிகாரியாகிய மொன்ஷியர் ஸ்டாலினைப் பேட்டி கண்டு பேசினார்.

### அப்போது நடந்த சம்பாஷணைக் குறிப்புகள்.

வெல்ஸ்: நான் சமீபத்தில் ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு விஜயம் செய்திருந்தேன். நான் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டைச் சந்தித்துச் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். அமெரிக்காவின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் சோவியத் ருஷியாவின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் நெருங்கிய தொடர்புகளிருப்பதாக நான் ஊகிக்கிறேன். என்னுடைய அபிப்பிராயம் எவ்வளவு தூரம் உண்மையாக இருக்கிறதென்பதைத் தாங்கள் தெரிவிக்கக்கூடுமா?

ஸ்டாலின்: இன்றைய உலகத்திலுள்ள சிறந்த அறிஞர்களில் ஒருவராகிய தங்களுடன் சம்பாஷிப்பதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அமெரிக்க சர்க்கார் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு முயற்சி செய்கிறார்களேயொழிய அத்தகைய நெருக்கடிக்குக் காரணமாக இருக்கும் பண வேற்றுமையை அகற்ற பிரியங் கொள்ளவில்லை. முதலாளித்துவத்தினாலேயே அமெரிக்காவில் அடிக்கடி பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுகின்றன. பொருளாதார நெருக்கடிகள் வருங்காலத்தில் ஏற்படாமலிருக்க வேண்டுமானால் முதலாளி மார்களின் ஆதிக்கத்திற்கு இடம் கொடாத ஓர் பொருளாதார திட்டத்தை அமெரிக்க சர்க்கார் வகுக்கவேண்டும்.

வெல்ஸ்:- தாங்கள் தெரிவிக்கும் அபிப்பிராயங்களிற் பெரும்பாலானவற்றை நான் ஏற்றுக் கொள்கிறேன். பொருளாதாரத் திட்டத்தைத் தாங்கள் கூறுவது போல் மாற்றியமைத்தால் பொதுவுடமை இயக்கத்திற்குச் சர்க்காரே உடந்தையாக இருப்பதாகவல்லவா புகார்கள் ஏற்படும். பொதுவுடமை இயக்கத்தைச் சட்ட விரோதமாகக் கருதும் ஒரு தேசத்தில் சர்க்கார் முதலாளித்துவத்தை அகற்றக் கூடிய பொருளாதாரத்திட்டத்தை எவ்வாறு அமுலுக்குக்கொண்டு வரமுடியும்?

ஸ்டாலின்:- பொதுவுடமை இயக்கத்தை அமெரிக்க சர்க்கார் எவ்விதத்திலும் ஆதரிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. அமெரிக்காவில் தனவந்தர்களுக்கும், ஏழை மக்களுக்குமுள்ள வேற்றுமைகளே பொருளாதார நெருக்கடிக்குக் காரணம். பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்குப் பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் ஒருங்கே ஏழை மக்களுக்கும், பணக்காரர்களுக்கும் நன்மைகள் ஏற்படக் கூடிய வேலையைச் செய்ய வேண்டும். இது சாத்தியமில்லாத விஷயமாகும். மேட்டிற்கும் பள்ளத்திற்கும் எவ்வாறு தண்ணீர் பாய்ச்ச முடியும். ஏழைகளுக்கு நன்மை செய்தால் ரூஸ்வெல்ட் பணக்காரர்களின் வெறுப்பைத் தேடிக்கொள்ள வேண்டும். பணக்காரர்களுக்கு உதவி செய்தால் அவர் ஏழைகளின் விரோதத்தை அடைய வேண்டும். ஆகவே ஏழைகள். பணக்காரர் என்ற வித்தியாசம் பாராட்டும் நாட்டில் எப்பொழுதும் பொருளாதாரக் கஷ்டம் இருந்தே தீரவேண்டும். இதுவே என்னுடைய அபிப்பிராயமாகும். இந்த அபிப்பிராயத்தைப் பொதுவுடமை இயக்கத்தின் எதிரிகள் கூட ஒப்புக் கொள்வார்கள்.

வெல்ஸ்:- பணக்காரர், ஏழைகள் என்ற வேறுபாடு மனித சமூகத்தில் புகுத்தப் பட்டிருப்பது வருந்தத் தக்கது. இவ்வேற்றுமையை நான் முற்றாக வெறுக்கின்றேன். இதனால் நான் பணக்காரர்களனைவரையும் வெறுக்கிறேனென்று தாங்கள் அபிப்பிராயப்படலாகாது. பணக்காரர்களில் இருசாரார் இருக்கின்றனர். ஒரு சாரார் லாபம் கிடைக்கும் பொருட்டு தங்களுடைய மூலதனத்தை மிகவும் நேர்மையற்ற முறையில் உபயோகிக்கின்றனர். இத்தகைய பணக்காரர்களை நான் அறவே வெறுக்கின்றேன். மற்றோர் சாரார் தங்களுடைய மூலதனத்தை மிகவும் ஆக்க வழியில் உபயோகிக்கின்றனர். அவர்களால் லட்சக்கணக்கான தொழிலாளர்களும், இதர ஊழியர்களும் வயிறு பிழைக்கின்றனர். தாங்கள் எடுத்துக் கொள்ளும் சிரமத்திற்காக அவர்கள் சொற்பலாபத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் லாபம் பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் பிரமாண்டமான தொழிற்சாலைகளை நடத்தி வரவில்லை. அவர்களுடைய பரோபகாரச் சிந்தையே தொழிற்சாலைகளை நடத்துமாறு தூண்டுகிறது. இன்றைய உலகத்திலுள்ள பணக்காரர்களிற் பெரும்பாலர் தங்களுடைய மகத்தான பொறுப்பை அறிந்து வருகின்றனர். அவர்கள் விரைவில் பொதுஜன ஊழியத்தில் ஈடுபடுவார்களென்பதிற் சந்தேகமில்லை. ஏழைகளுக்குக் கஷ்ட நிவர்த்தி கொடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி நான் பல பிரசங்கங்கள் செய்திருக்கிறேன். என்னுடைய அபிப்பிராயங்களைத் தற்கால இளைஞர்களிற் பெரும்பாலர் ஒப்புக்கொள்கின்றனர். பணக்காரர்களையும், நடுத்தர நிலைமையிலுள்ளவர்களையும் திடீரென்று கண்டனம் செய்யத் தொடங்குவதால் விபரீத விளைவுகள் ஏற்படுமென்பதிற் சந்தேகமில்லை. அமெரிக்காவைச் சேர்ந்த ராக்பெல்லர் ஹென்ரிபோர்டு முதலானவர்கள் பெரிய கோடீஸ்வரர்களாக இருக்கின்றனர். அவர்களால் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வயிறு பிழைக்கின்றனர்.

ஸ்டாலின்:- தங்களுடைய அபிப்பிராயங்கள் மேனாட்டு அறிஞர்களின் அபிப்பிராயங்களனைத்திலும் முற்போக்கு வாய்ந்தவையாக இருக்கின்றன. பணக்காரர்கள் அறிந்தோ அறியாமலோ தங்களுடைய லாபத்திலேயே சிரத்தை கொண்டிருப்பார்கள். அவர்கள் ஏழை மக்களிடமிருந்து நீண்ட நேர உழைப்பைப் பெற்றுக் கொண்டே அவர்களுக்குப் பணம் கொடுப்பார்கள். ஹென்ரி போர்டு, ராக்பெல்லர் முதலியோர் லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து வருவதாகத் தாங்கள் கூறுகின்றீர்கள். தாங்கள் பிரஸ்தாபித்த பேர்வழிகளே நெருக்கடியான சமயங்களில் சிறிதும் இரக்கமின்றி ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலையினின்று நீக்கியிருக்கின்றனர். தங்களுக்கு அவசியமான சமயங்களில் அவர்கள் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கின்றனர். தாங்கள் என்ன கூறினாலும் எனக்கு எந்தப் பணக்காரர்கள் மீதும் நம்பிக்கை கிடையாது. பணம் நல்ல மனிதர்களையும் கூடக் கெடுத்து விடுமென்பதிற் சந்தேகமில்லை. ஆகவே இது விஷயம் பற்றிய விவாதத்தை இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

வெல்ஸ்: பலாத்காரத்தில் தங்களுக்கும் தங்களுடைய சகாக்களுக்கும் நம்பிகை இருக்கிறதா?

ஸ்டாலின்:- எனக்கும் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் பலாத்காரத்தில் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் காரணமின்றியும் சந்தர்ப்பம் தெரியாமலும் நாங்கள் பலாத்காரத்தை உபயோகிக்க மாட்டோம். பொதுவுடமைக் கட்சிக்காரர்கள் பலாத்காரத்தைத் தங்களுடைய பிரதானமான நம்பிக்கையாகக் கொண்டிருக்கவில்லை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் பலாத்காரம் மிகவும் அவசியமென்று அவர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். கேடுகளை விளைவித்துக் கொண்டிருக்கும் புராதன முறை வலிய அகல்வது கிடையாது. அதைப்பலாத்காரமாகவே அகற்ற வேண்டும். இது சரித்திரப் பூர்வமான உண்மை. உதாரணமாக பிரான்ஸ் தேசத்தை மிகவும் கொடிய மன்னர்கள் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தனர். அவர்களுடைய கொடுங்கோன்மையை கடத்துவதற்குப் புரட்சி ஏற்பட்டது. இதே போல் ஸார் மன்னருடைய கொடுங்கோலாட்சியை அகற்றுவதற்குப்புரட்சி செய்ய வேண்டியதாக இருந்தது.

வெல்ஸ்: நான் பலாத்காரத்தின் அவசியத்தைவெறுக்கவில்லை. ஆனால் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட முறையிலேயே பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டுமென்பதே என்னுடைய அபிப்பிராயமாகும். தற்பொழுது அமுலிலுள்ள சட்டங்களை மீறுவதற்கு நாம் எவருக்கும் இடம்கொடுக்கக்கூடாது. பழைய முறையில் நன்மைகள் ஏற்படாவிடில், அதை அகற்றிவிட வேண்டியதவசியமாகும். இவ்வாறு செய்வதற்குப் பலாத்காரத்தை உபயோகிக்காமலிருப்பதற்குக் கூடியவரையில் முயற்சிசெய்ய வேண்டும். முதலில் நாம் அமைதியைப் பாதுகாக்க முயற்சிசெய்ய வேண்டும்.

### தொழிலாளர்களின் நிலைமை.

ஸ்டாலின்: தற்பொழுது ஏழை மக்கள் கவலையின்றி வாழ்ந்துவரும் தேசம் சோவியத்ருஷ்யாவென்பதை உலக முழுவதும் அறியும். சோவியத் சர்க்கார் தங்களுடைய பிரஜைகளை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வருகின்றனர். அவர்களுடைய ஆட்சிமுறையில் ஜனங்களில் ஒரு சாராரும் கஷ்டப்படவில்லை. சோவியத் ருஷ்யாவை இன்றைய உலகத்திலுள்ள அறிஞர்கள் "ஏழைகளின் சுவர்க்கம்" என்ற சிறப்புப் பெயர்கொண்டு அழைக்கின்றனர். சோவியத்ருஷ்யாவைப்பற்றிச் சிலர் தவறுதலாக அபிப்பிராயப்படுகின்றனர். இத்தகைய தவறுதலான அபிப்பிராயத்தை போக்குவதற்குத் தாங்கள் பத்திரிகைகள் மூலமாக முயற்சி செய்யவேண்டும்.

வெல்ஸ்: தங்களுடைய சர்க்கார் சோவியத் ருஷ்யாவை மிகவும் திறமையாகவும் நேர்மையாகவும் ஆட்சி செலுத்தி வருகின்றனரென்பதை நான் அறிவேன். ஏற்கனவே அவர்களைப்பற்றிப் பல கட்டுரைகளும் நூல்களும் வெளியாகியிருக்கின்றன. நான் என்னுடைய தாய்நாட்டிற்குத் திரும்பியதும் சோவியத் ருஷ்யாவின் சிறப்பியல்புகளைப்பற்றித் தொடர்ச்சியாகக் கட்டுரைகள் எழுதுவதற்குத்தீர்மானித்திருக்கிறேன். எனக்கு பேட்டிகொடுத்து பல ருசிகரமான விஷயங்களை விளக்கிக்கூறிய தங்களுககு என்னுடைய மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டாலின்: நான் கூறிய விஷயங்களனைத்தையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த தங்களுக்கு எனது நன்றியறிதலைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

## இயமனுக்கு பென்ஷன்.

"ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டாம்......" என்று நமது பழங் கிழவி பாடிவைத்திருக்கிறாள். செத்தவர் திட்டமாகவே திரும்பி வரமாட்டார்களென்றுதான் யாவரும் சொல்லுகிறார்கள். அதைக்கூட பொய்யாக்கிவிட, கலிபோர்னியா டாக்டர் ஒருவர் பிரயத்தனம் செய்துவருகிறாராம். இது ஒரு பெரிய ஆச்சரியமல்லவா? மனிதன் தன்னுடைய அறிவினாலும், ஆராய்ச்சியினாலும் எவ்வளவோ அசாத்தியமான காரியங்களையெல்லாம் செய்து வருகிறான். ஆனால் உயிரை மட்டும் அவனால் செத்த பிணத்திற்குக் கொடுக்க முடியாது என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். ஒரு உயிரை மனிதன் வாங்கிவிடலாம். அது ஒரு பெரிய காரியமல்ல. வாங்கின உயிரைக் கொடுக்கமட்டும் ஒருவராலும் முடியாது. கலிபோர்னியா டாக்டர் ஒருவர் செத்தவனை உயிரோடு எழும்படி செய்துவிடலாமென்கிறார். அவர் வெறும் பேச்சுப்பேசவில்லையாம். நீண்டகாலமாக ஆராய்ச்சிசெய்து அவர் ஒருவகையான மருந்தைத் தயாரித்திருக்கிறாராம். இறந்துபோன ஒரு நாயின் சரீரத்திற்குள் அம்மருந்தை அவர் ஊசியின் வழியாகப் புகுத்தினாராம். சிறிது நேரத்திற்கப்பால் செத்த நாய் பிழைத்து எழுந்து விட்டதாம். இன்றைக்கும் அந்த நாய் உயிரோடு வாழ்ந்து சுகமாக வருகிறதாம். செத்த நாய்க்கு உயிர் கிடைக்குமெனறால், செத்தமனிதனுக்கும் உயிரைகொடுக்கலாம் என்று பிரஸ்தாப டாக்டர் சாதிக்கிறார். தூக்கிலிடப்படும் சிலருடைய பிரேதங்களில் அவர் தமதுடைய மருந்தைச் செலுத்தி பரீக்ஷைசெய்து பார்க்கப்போகிறாராம். ஒரு சமயம் அவருடைய முயற்சி வெற்றியை யளித்துவிட்டால் என்ன ஐயா செய்வது? ஏற்கனவே உலகத்தின் ஜனத்தொகை அதிகரிக்கிறதென்றும், பஞ்சம் வருகிறதென்றும் சொல்லுகிறார்கள். இந்த அழகில் செத்தவரும் பிழைத்துவிடுவார்களென்றால் என்ன ஐயா நடக்கும்? இயமனுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டியதாகுமல்லவோ? இன்மேல் இயமனும் வேலையில்லாப் பஞ்சத்திற்கு இலக்காகிவிடுவான்!

## விதையடிப்பு இங்கு வருமா?

சென்ற மாதத்தில் ஜெர்மனியில் 111 ஆண்களுக்கு விதையடிக்கப்பட்டதாம். சென்ற மாதத்தில் விதையடிக்கப்பட்ட 111 பேர்களும் பெண் சோரம் செய்த குற்றவாளிகளாம். பெண்களிடம் முறை கேடாக நடந்துகொண்டவர்களாம். பெண் கடத்தினோரையும், பெண்களிடம் மூர்க்கத்தனமாக நடந்து கொள்வோரையும் விதையடித்து நபும்சகர்களாக ஆக்கப்படுகிறது. வீ. கே.

### "கான சக்தி" ஆசிரியர் கைது.

16-11-34 தேதி காலை கல்கத்தா போலீசார் பொதுவுடமைக் கட்சி பத்திரிகையாகிய "கான சக்தி"யின் காரியாலயத்திற்குச் சென்று சோதனை போட்டு தோழர் ஸரோஜ் முக்கர்ஜி என்ற அதன் ஆசிரியரையும், இதர கட்சி உத்தியோகஸ்தர்களையும் கைது செய்தனர். கைது செய்த காரணம் புலப்படவில்லை. யு. பிரஸ் (சு. மி.)

### தோழர் எம். என். ராய் ரத்தம் கக்குகிறார்.

பெரில்லி சிறையில் காவல் தண்டனை அனுபவித்துவரும் பொதுவுடைமைக் கட்சியைச்சேர்ந்த தோழர் எம். என். ராயின் நிலை கேவலமாகி வருவதாக இங்கு தகவல் எட்டுகிறது. ஒவ்வொரு சமயமும் அவர் இருமும் போது ரத்தம் கக்குவதாகத்தெரிகிறது. நிருபர் தந்தி (சு. மி.)

### ஆஜ்மீர்புகாரைப்பற்றி விஜாரிக்கக் கமிட்டி.

ஆஜ்மீரைச் சேர்ந்த பிரபல காங்கிரஸ் ஊழியரான ஜனப் ஜமாலுதீன் மாக்மூர், பாட்னாவிலுள்ள காங்கிரஸ் மகாசபைத்தலைவர் பாபு ராஜேந்திரபிரசாதினிடம் ஆஜ்மீரில் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் தோல்வியுற்றதற்கு ஆஜ்மீரிலுள்ள சில காங்கிரஸ்காரர்களின் துரோகமே காரணமென்று புகார் செய்திருக்கிறார். இந்தப் புகாரைப்பற்றி விசாரிக்க தாம் ஒரு கமிட்டியை நியமிப்பதாக தலைவர் பதில் அனுப்பியிருக்கிறார். சு-மி.

குறிப்பு:— இதுபோல் ஜஸ்டிஸ் கட்சியார் தம் கட்சியாருக்குச் செய்த துரோகத்தை விஜாரிக்க ஜஸ்டிஸ் கட்சியில் நாதியுண்டா? (ப-ர்)

## தாடி வளர்த்தால் தண்டனை.

ரொமேனியா சர்க்காருக்குத் திடீரென்று தாடியின் மீது வெறுப்பேற்பட்டு விட்டதாம். இதற்கு முன் அங்குள்ள மக்கள் தாடி வளர்த்துக் கொள்வதைப்பற்றியோ, தாடி சிரைத்துக்கொள்வதைப்பற்றியோ பேச்சே இல்லாமலிருந்தது. ஆனால் தற்போது அக்குடி ஜனங்களில் ஒருவரும் தாடி வளர்த்துக்கொள்ளக் கூடாதென்பதைப்பற்றி சர்க்கார் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள்.

"தாடி வளர்ப்பது கண்டிப்பாய் விலக்கப்பட்டிருக்கிறது. எனவே யாராவது புதிதாய் தாடி வளர்த்துக் கொள்ள இஷ்டப்பட்டாலுஞ்சரி அல்லது இருக்கும் தாடியை சிரைத்துப்போடாமல் வைத்துக்கொள்ள விரும்பினாலுஞ்சரி, அதற்காக சர்க்காரிடமிருந்து லைசென்ஸ் வாங்கிக் கொள்ள வேண்டும்"

"இந்த விளம்பர அறிக்கை வெளியான எட்டு நாளைக்குள் எல்லோரும் தாடியைச்சிரைத்துக்கொள்ள வேண்டும். அங்ஙனம் சிரைத்துக் கொள்ளாதவர்களுக்கு தண்டனை விதிக்கப்படும்"

## இடி சப்தம்போன்ற பேச்சு

உலகில் விஞ்ஞான சாஸ்திர நிபுணர்கள் புதிது புதிதாகக் கண்டுபிடித்துவரும் விஷயங்கள் மிகவும் ஆச்சரியகரமானவைகளாக இருக்கின்றன. மேற்படி நிபுணர்கள் இப்போது ஓர் புதிய அற்புதமான விஷயத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது ஒலிபரப்பும் கருவி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் மூலம் மனிதனின் குரலை 10 லட்சம் மடங்கு அதிகப்படுத்தலாம். அதாவது மேற்படி கருவியால் மனிதன் குரலை நியாக்ரா நீர்வீழ்ச்சியின் சப்தத்தைப்போல் 1000 மடங்கு அதிகமுள்ளதாகச் செய்யமுடியும். அதாவது ஒருவர் பேசினால் அவருடைய சப்தம் பல மைல்களுக்கு அப்பால் கேட்கும். அந்த சப்தம் இடியின் சப்தத்தைக்காட்டிலும் அதிகமாக இருக்கும். ஆனால் அந்த சப்தத்திற்கும் மனிதனுடைய குரலுக்கும் சிறிதும் சம்பந்தமிராது. நடுக்கடலில் தவிக்கும் கப்பலிலுள்ளவர்களுடனும் கடலில் படகில் தவிப்பவர்களுடனும் அந்தக்கருவியின் மூலம் பேசி அவர்களுக்கு உதவி செய்யலாம். இன்னும் பெரும் தீ விபத்தேற்பட்டு சந்தடி அதிகமாக இருக்கும் சமயத்திலும் அக்கருவி உதவியாக இருக்கும். மேற்படி கருவியை நியாயமான வழியில் உபயோகிக்கும் பட்சத்தில் அதனால் ஜனங்களுக்கு நன்மையுண்டு. அதை அநீதையாக உபயோகிக்கும் பட்சத்தில் அதனால் மிகுந்த பாதகமும் ஏற்படும்.

## பிரிட்டனில் 100க்கு 20 வீதம் விவாகரத்துப் பெருகிவிட்டது.

பிரிட்டனிலுள்ள நவீன நாகரீக மக்கள் தம் இஷ்டம் போல் கலியாணப் பதிவுசெய்து கொள்ளும் வழக்கம் உடையவர்களாயிருப்பதைப் போலவே, விவாகத்தை முறித்துக் கொண்டு வேறாகிவிடுவதிலும் ஏதேச்சாதிகார முடையவர்களாகவே இருக்கின்றனர். நவீன முறைப்படி கலியாணம் செய்து கொள்ளும் பிரிட்டிஷ் தம்பதியரில் பெரும்பாலோர் சாதாரண விஷயங்கட்கெல்லாம் பிணக்குப்பட்டு விவாகப்பதிவு ஆபிசுக்குச் சென்று 'சட்பட்' என்று விவாகரத்து செய்து கொள்கின்றனர்.

விவாகரத்து சம்பவங்கள் பிரிட்டனில் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகின்றன. சில வருடங்களுக்கு மூன் கணக்கெடுக்கப்பட்டதில் 100 விவாகங்களுக்கு ஒன்றிரண்டு விகிதம் தான் பிரிவினை ஏற்பட்டுவந்தது. இப்போது சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்குப்படி 100 விவாகங்களுக்கு 20 விவாகங்கள் விகிதம் துரிதமாய் பிரிவினைப்பட்டுப் போகின்றனவாம். இதுவும் ஒரு நாகரீகம்!

## தலைவழியாய் சங்கீதம்.

ஓர் நவீன கிராமபோன் லண்டனில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வெளிவரும் பாட்டுகளைக் காதின் மூலம் கேட்க முடியாது. பல்லின் மூலமே இந்த நவீன கிராமபோன்களின் பாட்டுகளைக் கேட்கமுடியும். காதில் எத்தகைய ஊறு இல்லாதவனாயினும் இப்பெட்டியினருகில் "நின்றால்" எவ்வித தொனியையும் கேட்கமுடியாது.

கிராமபோனில் அமைந்துள்ள சங்கீதமானது மின்சார சக்தியின் உதவியைக்கொண்டு ஒரு மிருதுவான திண்டில் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. அம்மெதுவான திண்டு மண்டை ஓட்டின் எந்தப்பாகத்தைக்கொண்டேனும் மெதுவாகத் தீண்டப்படுமாயின் மண்டை எலும்புகளின் வழியாகச் சங்கீதம் நமது அறிவிற்கெட்டுகின்றது. கன்னம் முதலிய இடங்களில் அவ்வாறு அனைத்துப்பொருத்தினாலும்கூட சங்கீதம் நமக்குக் கேட்கக்கூடியதாயிருக்கிறது. இதேபோன்று பல்லின் வழியாகவும் இச்சங்கீதத்தைக் கேட்க இயலும். இந்த நவீனக் கருவியானது செவிடர்களின் நன்மையின் பொருட்டுச்செய்யப்பட்டிருக்கின்றது.

இப்பொழுது அமெரிக்காவில் 10,000,000 வேலையில்லாதார் இருக்கின்றனரெனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

# குழந்தை வளர்ப்பும் சுகாதாரமும்.

## ஈ. வெ. இராமசாமி சொற்பொழிவு.

ஈரோடுசுகாதார கல்விவாரக்கொண்டாட்ட கோஷ்டியார் 20-11-34ந் தேதி காலை 7 மணிக்கு வள்ளுவர் புது வீதியில் இருக்கும் முனிசிபல் சிசு பரிபாலன விடுதியைப் பார்வையிட்டனர் விடுதிக்கு முன்புறமுள்ள மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி டாக்டர் ஏ. என். வர்க்கீஸ், லேடி டாக்டர் ஸ்ரீமதி ராஜநாயகம், முனிசிபல் கமிஷனர் தோழர் டி. புருஷோத்தம், சிசு பரிபாலன விடுதியின் லேடி டாக்டர் ஸ்ரீமதி. ரோஸ் ஜான், தோழர் ஈ.வெ. ராமசாமி, அந்த வார்டு கவுன்சிலர், இன்னும் முனிசிபல் உத்தியோகஸ்தர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள் ஆகியவர்களும் நகர முக்கியஸ்தர்கள் பலரும் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்துக்கு டாக்டர் ஏ. என். வர்க்கீஸ் தலைமை வகித்தார்.

லேடி டாக்டர் ஸ்ரீமதி ராஜநாயகம் "சுகாதாரம்" என்னும் விஷயம் பற்றி பேசினார். பின்பு தோழர் ஈ. வெ. ராமசாமி பேசினார்.


### ராமசாமி பேச்சு.

நமது நாட்டு மக்களில் 100க்கு 95 பேர் சுகாதாரத்தின் பயனையறியாதவர்களாயும் அதையறிந்து கொள்ள வேண்டுமென்னும் அக்கரையில்லாதவர்களாயுமிருக்கின்றார்கள். காரணம், பிடிப்பின்மையும், பழக்க வழக்கமுமேயாகும். இதையனுசரித்தே மேல் நாட்டார் நம்மை சுகாதாரமற்றவர்கள் என்றும், நாகரிகமற்றவர்கள் என்றும் நினைக்கிறார்கள். நம் நாட்டிலும் மேல் ஜாதிக்காரர்கள் என்போர் தங்களை நாகரிகஸ்தர் என்றும், சுகாதாரமுடையவர்கள் என்றும் நினைத்துக் கொண்டு, மற்றவர்களை சுகாதாரமற்றவர்கள் என்றும், நாகரிகமற்றவர்கள் என்றும், தாழ்ந்த ஜாதியார்கள் என்றும் குறிப்பிடுகிறார்கள். சுகாதாரமின்மையாலேயே ஒரு கூட்டத்தாரைத் தாழ்த்தப் பட்டவர்கள் என்று காரணமும் தத்துவார்த்தமும் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட சுகாதாரத்தைக் கைக்கொள்ளாத தாழ்த்தப்பட்ட மக்களை சுகாதாரத்தைக் கைக்கொள்ள முடியாமல் கிணறு, குளம் நல்ல வாழ்க்கை முதலியவைகளை கடவுள் பேராலும், மதத்தின் பேராலும் தடைப்படுத்தி வைக்கப் பட்டிருக்கின்றது. நம்மில் அத்தகைய இழிவும் தடையும் கற்பிக்கும் மக்களின் கெட்ட எண்ணத்தையும், அதன் பயனாய் சுகாதார வசதியை அனுபவிக்க முடியாமல் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒதுக்கப் பட்டிருக்கும் மக்களின் பரிதாப நிலைமையையும் கண் கூடாகப் பார்த்து வருகிறோம். இந்த விஷயத்தில் 'சுகாதாரம்' என்பதற்கு ஏற்பட்டுள்ள பெரும் தடையை ஒழிக்க சுகாதார இலாகா அதிகாரிகளும், அரசாங்கமும் தக்க சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மேல் நாட்டினர் தங்கள் வாழ்க்கையில் சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கையில் உடை, உணவு, வீடு, வாசல், பானம், நல்ல காற்று, சுத்தமான தேகம் ஆகியவைகளில் கண்ணுங் கருத்துமாயிருப்பார்கள். எனது ஐரோப்பா யாத்திரையில் லண்டனிலிருந்து 270 மைல் தூரத்திலிருக்கும் ஒரு கிராமத்தில் ஒரு தொழிலாளி வீட்டில் ஒரு நாள் தங்கினேன். நான் தங்கியிருந்த வீட்டில் ஒரு சிறுபையன் இருந்தான். அவனுடைய அம்மாளும் அக்காளும் ஆக மூவரும் என்னுடன்பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று பையன் வெளியில் ஓடினான். பிறகுவெகு நேரம் வரவில்லை. பிறகு பையன் எங்கே என்று நான் கேட்டேன். உடனே அவன் அக்காள் வெளியில் சென்று அவனைத் தேடிப் பிடித்து வந்தாள். பேசிக்கொண்டிருக்க இருக்கத் திடீரென்று வெளியில் போன காரணம் என்ன என்று கேட்டதற்கு "நான் நல்ல காற்று உட்கொள்ள வெளியில்போய் உலாவி வந்தேன்" என்று பதில்சொன்னான். இது அவன் ஒருசாக்குக்காக சொல்லிஇருக்கலாம் என்றாலும் 5வயது பையன் நல்ல காற்று கெட்டகாற்று என்பதை உணர்ந்திருக்கிறான் என்பது கவனிக்கத்தக்கதாகும். எந்த வேலையிருந்தாலும், காலா காலங்களில் சுகாதாரத்தைக் கைகொள்ளுவதில் மேல்நாட்டில் சிறுவர்கள் முதல் கவலை கொண்டிருக்கிறார்கள் என்பது இதனால் தெரிகிறது. மேல்நாட்டுப் படிப்பில் சுகாதார வாசமே இல்லை. நம்நாட்டிற்கு ஆண்பெண் அடங்கலும் அநேகர் சுகாதாரம்இன்னதென்பதையறியாமலும், கொஞ்சநஞ்சம் கேள்விப்பட்டாலும் அதை பொருட்படுத்தாமலுமே தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்- வீதிகளில் பெரும் அசுத்தம் செய்கின்றனர். கொஞ்சம் படித்த பெண்களும் கூட தங்கள் வீடு வாசல்களை சுகாதார முறைப்படி சுத்தமாய் வைத்துக் கொள்வதில்லை. பொதுவாகவே மேல் நாட்டினர் தங்கள் வாழ்க்கையில் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டு அதற்கேற்றபடி நடந்து வருவதனால் வியாதிகளின்தொல்லைக்காளாகாமலும், சுகஜீவிகளாகவும்உலகில் அதிக நாள் வாழ்கிறார்கள். நம் நாட்டு ஜனங்களோ, வியாதி ஏற்படுவதும், மரணம் சம்பவிப்பதும் தங்கள்தங்கள் தலைவிதி யென்றும், அவரவர் கேட்டு வந்த வரம் என்றும் நினைத்துக் கொண்டு, தங்கள் அஜாக்கிரதையினாலும், சுகாதார மின்மையினாலும் ஏற்படும் வியாதிகட்குத் தகுந்த வைத்திய சிகிச்சையும் செய்யாமல் கடவுளுக்குக் காணிக்கை எடுத்து முடிந்து வைப்பதும், விபூதி மந்திரித்துப் போடுவதும் இன்னும் பல வேண்டுதலை செய்து கொள்ளுவதும் கடைசியில் மரணம் ஏற்பட்டால் அவ்வளவுதான் அவனுக்கு ஆயுசு என்று முடிவுகட்டியும் விடுகிறார்கள். அஜீரணத்தினால் ஏற்படும் காலரா வியாதியை மகாமாரி என்று கொண்டாடுகிறார்கள். அதோடு நம் நாட்டில் பண்டிகைகளும், உற்சவங்களும் அநேகம். அதைப் பார்க்கச் செல்லும் ஜனக்கூட்டமும் ஏராளம்- உற்சவம் நடக்குமிடங்களில் தான் வியாதிகள் உற்பத்தியாகின்றன. பிறகு அவைகள் அங்கிருந்து பல ஜனங்களின் மூலம் ஊர்களுக்குப் பரவுகிறது. இவ்வித மூட நம்பிக்கையும் அறியாமையும் உடைய ஜனங்கள் வியாதி வராமல் தடுக்க சுகாதாரத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றால் அது இம்மாதிரி ஒரு நாள் இரண்டு நாளில் நடக்கும் கொண்டாட்டத்தினால் கொஞ்சமும் பலனளிக்காது. இந்தக்கொண்டாட்டத்தோடு சுகாதாரப் பிரசாரம் பூர்த்தியடைந்து விட்டதெனக் கருதக்கூடாது. நகரசபையார் ஜனங்களின் மனப்பான்மைக் கொத்தபடி முக்கியமாய் பெண்களுக்கு பெண்டிர்களைக் கொண்டும், பெண் போதகர்களைக் கொண்டும், அடிக்கடி சுகாதார போதனைசெய்து வரவேண்டும். சாதாரண ஜனங்கள் இதுவும் ஒரு சர்க்கார் பண்டிகை யென்றே நினைப்பார்கள். இந்தக் கொண்டாட்டம் தீர்ந்தவுடன் நான் எதிர்பார்க்கும் புதிய முறைச் சுகாதாரப் பிரசாரம் நடத்தி வரவும் பொதுவாக தெருக்களிலும் பொது ஜாகாக்களிலும், குழாய் ஸ்தலங்களிலும் எந்த வித அசுத்தமும் நேராதபடி புதிய திட்டத்தில் முனிசிபல் கமிஷனர் சுகாதாரத்தை அமுலுக்குக்கொண்டுவருவார் என்று ஆசை

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

## தோழர் மெ, செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள்,



12—11—34ல் காரைக்குடி முனிசிபல் சேர்மனாக ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பெற்றுள்ளார்.

## கமிஷனர் அவர்கள் கவனிக்க வேண்டுகிறோம்.

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு கமிஷனர் ஏற்பட்டு சுமார் 2 மாத காலமே ஆனபோதிலும் இதற்குள் பல துறைகளிலும் சீர்திருத்தங்கள் நடந்து வருகின்றதானது மகிழ்ச்சியடையக் கூடிய காரியமேயாகும்.

என்றாலும் சுகாதார விஷயத்திலும் தெருக்கள் ஆக்கிரமிப்பு விஷயத்திலும் இன்னும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

### தெருக்கள்.

தெருக்கள் அதாவது ஜனங்கள் குடி இருக்கும் பாக வீதிகள் பெரிதும் கக்கூசாகவே உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன.

குழந்தைகளை பகல் காலங்களில் தாய்மார்கள் தாராளமாக தெருக்களில் மலஜலம் கழிக்க விடுகின்றார்கள்.

இரவு நேரங்களில் பெரியவர்களே தெருக்களை கக்கூசாக உபயோகிக்கிறார்கள்.

### குழாய்கள்.

தெருக்குழாய்களின் பக்கத்தில் பாத்திரம் மாடுகன்றுகள் கழுவுகின்றார்கள, தெருக்குழாய்களில் துணிகள் துவைக்கிறார்கள். தெருக்குழாய்களில் ஸ்நானம் செய்கின்றார்கள்.

இக்காரியங்கள் பெரிதும் மேல் ஜாதிக்காரர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்ளுபவர்கள் குடி இருக்கும் வீதிகளிலேயே அதிகமாய் நடக்கின்றன.

சில சந்து பொந்துகள் நடக்க யோக்கியதை யற்றவைகளாகவே காணப்படுகின்றன.

தெருக்களில் குப்பைத்தொட்டிகள் அல்லாத இடங்களில் குப்பைகள் அசிங்கங்கள் போடப்பட்டு வருகின்றன.

### கடைவீதிகள்.

இவைகள் ஒருபுறமிருக்க கடைவீதிகளில் குறுகிய தெருக்களாக இருக்கும் இடங்களிலும்கூட வீதியில் கால்கள் நிறுத்தி தட்டிபோட்டுக்கொண்டுதெருவின் அகலத்தைக் குறைத்துக் கொள்ளுவதும் தெருவில் டிச்சுகளின் மீதும், தெரு ஓரங்களிலும் பெட்டிகளை போட்டுக்கொள்ளுவதும் கால்கள் நட்டுப் பலகைகள் போட்டு உட்கார்ந்து கொள்ளுவது, வியாபார சாமான்களை வீதியில் அடுக்கிவைப்பது ஆகிய காரியங்களால் தெருக்கள் அதிக குறுகலாக்கப்படுகின்றன.

லார்டு நேபியர் வீதியில் கோர்ட்டு வீதி ஜங்கிஷனிலிருந்து அக்ரூரவீதி ஜங்கிஷன் வரையில் நடக்கும் அக்கிரமம் சொல்லத்தரமல்ல. வாடகைக்கு இருப்பவர்கள் முனிசிபாலிட்டி இடத்தை உபயோகப்படுத்திக் கொண்டு ஜனங்களுக்கு இடஞ்சல் செய்து விட்டு கடைக்காரர்களுக்கு வாடகை கொடுக்கின்றார்கள் என்றால் ஜனங்களுக்கு அனுகூலம் செய்வதற்காக இருக்கும் முனிசிபாலிட்டி இதை சகித்துக்கொண்டு இருக்க முடியாது.

படிக்கட்டுகள் கூடதெருவில் இருக்க இடமில்லாமல் செய்தால் தான் அந்த வீதி வண்டி போக்கு வரத்துக்கு லாயக்காகுமே ஒழிய மற்றபடி அதை இந்த மாதிரி கடைக்காரர்களுக்கு கொள்ளைபோக விட்டுவிட்டு வண்டிகளை அதில் விடுவது மகா கொடுமையான காரியமாகும். சமீபத்தில் ஒன்று இரண்டு வாரத்தில் 2, 3 ஆபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. மோட்டார்கள் பலமாக தாக்கப்பட்டு காயமடைந்ததை நேரிலேயேபார்க்க நேர்ந்ததாலேயே இதை எழுதுகிறோம்.

இந்த குறைபாடுகள் ஈரோடு முனிசிபாலிட்டியில் வெகுநாளாய் இருந்து வருகிறது என்றாலும் அவைகள் பெரிதும் ஜனநாயக தத்துவத்தால் ஏற்படுகின்ற தவிர்க்கமுடியாத கெடுதி என்று கருதித்தான் ஒவ்வொரு கௌன்சிலுக்கும் கமிஷனர்கள் வேண்டியது அவசியம் என்றும், அவர் தனது சுதந்தர எண்ணங்களை தாராளமாய் உபயோகிக்கதகுதி உடையவராய் இருக்க வேண்டும் என்றும் அறிஞர்கள் ஆசைப்பட்டதாகும். ஆதலால் கமிஷனர் அவர்கள் தயவு செய்து இக்காரியங்களில் சிறிது கவனம் செலுத்தி பொது ஜன சவுகரியத்துக்கு உதவிபுரிய வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

இந்தக்காரியங்கள் ஆரம்பத்தில் சிலருக்கு அசௌகரியமாகத்தோன்றலாம். பழக்கமாகிவிட்டால் பிறகு சரியாய்ப்போய் விடும் என்று கருதுகின்றோம். அன்றியும் சிலருக்கு அசௌகரியம் என்பதற்காக பொது ஜனங்கள் கஷ்டப்படுவது என்பது நாகரீகத்துக்கும் நீதிக்கும் ஒத்ததாகாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். மற்ற விஷயங்கள் பின்னால் பார்த்துக்கொள்ளலாம்.

## ஈரோட்டில் கல்வி மந்திரி விஜயம்.

கல்வி மந்திரியார் கனம் தோழர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் 24—11—34ந்தேதி காலை மெயிலில் சென்னையிலிருந்து ஈரோடு வந்து சேர்ந்தார்.

ஈரோடு முனிசிபல் சேர்மென் அவர்களும், கவுன்சிலர்களும், கமிஷனர் அவர்களும் மற்றும் அதிகாரிகளும் பலர் ஸ்டேஷனுக்குச் சென்று வரவேற்று மாலையிட்டு சேர்மென் கான்சாஹிப் ஷேக்தாவூத் அவர்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சில கவுன்சிலர்களுடன் சிற்றுண்டி அருந்தியபின் லண்டன்மிஷின் மைதானத்தில் சாரணர்களிடம் மரியாதை பெற்று அவர்களால் செய்து காட்டப்பட்ட பல வேடிக்கைகளையும் கண்டு மகிழ்ந்துஅவர்களுக்குப்புத்திமதிகூறினர்.பிறகு8மணிக்குமுனிசிபல்ஆபீசுக்குவந்துகவுன்சில்(டெபுடேஷன்) அதை வரவேற்று கல்விசம்மந்தமான உதவித் தொகை விஷயமாய் ஈரோடு முனிசிபல் கவுன்சிலுக்கு உள்ள குறைகளை பக்ஷத்தோடு கேட்டு கவுன்சிலர் கோரிக்கை மிகவும் ஞாயமானது என்றும் அது விஷயத்தில் தன்னால் கூடியதை செய்வதாயும் தெரிவித்தார்.

### வரவேற்புப்பத்திரம்.

பிறகு ஈரோடு முனிசிபல் சென்ட்ரல் பிரைமரி பள்ளிக் கூடத்தில் முனிசிபல் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

அதற்கு தக்கபடி பதிலளித்தார். வரவேற்பு கூட்டத்திற்கு அநேக பிரமுகர்களும் பெண்களும் ஏராளமாய் விஜயம் செய்திருந்தது பாராட்டத் தக்கதாகும்.

அதன் பிறகு லண்டன் மிஷின் டிரெயனிங் ஸ்கூல், போர்ட் ஹைஸ்கூல், மகாஜனஸ்கூல், கவர்ன்மெண்ட் பெண்கள் டிரெயினிங் ஸ்கூல் முதலியவைகளைப் பார்வையிட்டு விட்டு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் வீட்டுக்குச் சென்று ½ மணி நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு சேர்மென் அவர்கள் வீட்டுக்கு விருந்துக்குச் சென்றார்

விருந்துக்கு தோழர்கள் திவான்பகதூர், C. S. இரத்தினசபாபதி முதலியார், ஈ. வே. ராமசாமி, சிக்கய்ய நாயக்கர், V. V. C. R. முருகேச முதலியார், எஸ். கோவிந்தசாமி நாயுடு, டி. வி. சுப்பிரமணியம், அ. பொன்னம்பலம், முதலிய பலர் அழைக்கப்பட்டு கலந்து கொண்டார்கள்.

பகல் 3மணிக்கு உபாத்தியாயர்கள் சங்க தூது ஏற்று பேசினர். 3-30க்கு உபாத்தியாயர்கள் சங்க வரவேற்புப்பத்திரம் அளிக்கப்பட்டது.

4மணிக்கு மகாஜன ஹைஸ்கூலில் பெரிய தொரு தேநீர் விருந்து நடந்தது. 4-30க்கு மகாஜன ஹைஸ்கூல் கமிட்டியில் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது.

5மணிக்கு பந்தைய விளையாட்டில் ஜெயித்தவர்களுக்கு கனம் மந்திரியால் சன்மானம் வழங்கப்பட்டது. இரவு சேர்மென் அவர்கள் வீட்டில் கனம் மந்திரியாருக்கு ஒரு பொது விருந்து நடந்தது. அதில் ஊர் பிரமுகர்கள் எல்லோரும் அழைக்கப்பட்டு கலந்து கொண்டார்கள். இரவு பத்து மணிக்கு சென்னைக்குப்புறப்பட்டு விட்டார்.

## சிவநேசச் செல்வரின் கலப்பு மணம்.

பலவான்குடி சிவநேசன்பத்திராசிரியர் தோழர் ராம. கு. ராம.ராமசாமி செட்டியாரவர்களையாவரும் அறிவார்கள். தோழர் சொ. முருகப்பா அவர்களும், தோழர் ராம. சுப்பிரமணியம் அவர்களும் கலப்புமணம் செய்து கொண்ட காலத்தில் தோழர் ராமசாமி செட்டியாரவர்கள் எவ்வளவு தூரம் தூற்றித் தமது பத்திரிகையிலெழுதினர் களென்பதை அறியாதார் இருக்கமாட்டார். கலப்புமணத்தால் ஜாதியே அழிந்துபோகுமென்றும் மதம் கவிழ்ந்து போகுமென்றும் எழுதினர்கள். ஆனால் ஒரு வருஷம் முன்பு புதுச்சேரியில் தோழர் ராம. கு. ராம. ராமசாமி செட்டியாரவர்கள் கலப்புமணம் செய்துஷ பெண்ணை அழைத்துவந்துசிவநேசன் ஆபீஸ் கட்டிடத்திலே இருந்துஇன்ப வாழ்வு நடத்துகிறார்கள். கடவுள் கிருபையால் ஒரு பெண் குழந்தையும் பிறந்து சுகமாக இருக்கிறது. பெண்ணின் குலம் படையாச்சி வகுப்பென்று தெரிகிறது. பெயர் விஜயாள். குழந்தைக்கு மீனாட்சி என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கலப்புமணக் குடும்பம் சிறப்பாக வாழ்க. மனிதருக்குக் காலக்கிரமத்தில் அறிவு வளர வளர அபிப்பிராயமும் மாறும். உலகம் விளங்காத காலத்தில் சீர்திருத்தங்கள் தப்பிதமாகப்படும். அறிவு முதிர முதிரத் தாமே கையாள்வது இயல்பென்பதற்கு இந்நிகழ்ச்சியே போதிய சான்றாகும். (குமரன்)

# கொள்கை இல்லாதவர் களுக்கு வெற்றி.

இந்திய சட்ட சபைத்தேர்தல்இந்தியா முழுவதிலும் அனேகமாக நடந்தாகி விட்டது.

இவற்றுள் சென்னையே பார்ப்பனர்களுக்கு பெருமிதவெற்றி அளித்து எங்கு பார்த்தாலும் பார்ப்பன வெற்றிக்கொண்டாட்டத்திருநாள்கள் நடைபெறச்செய்திருக்கிறது.இத்திருநாள்களை புராணத்திருநாள்கள் அதாவது "நரகாசூரன் தோற்றநாள்"(அல்லது) "நரகா சூரனைக்கொன்ற நாள்" என்று தீபாவளி கொண்டாடுவது போல் "பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோற்றநாள் (அல்லது) ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப்புதைத்தநாள்" என்று இப்போது ஊர் ஊராய் கொண்டாடப் புறப்பட்டு விட்டார்கள். நம் பார்ப்பனர்கள். இத்திருநாள் இனிவருஷா வருஷம் (காந்தி ஜயந்தி முதலியவைபோல்) கொண்டாடப்படலாம். இதில் பார்ப்பனரல்லாதாரும் பெருமிதமாய் கலந்துகொண்டு எண்ணெய் ஸ்நானம் செய்து புதுவேஷ்டி அணிந்து பலகாரம் செய்து சாப்பிடலாம். என்றாலும் இத்திருநாள் கொண்டாட்டத்தின் பயனாய் ஏற்பட்ட லாபம் என்ன என்று பார்ப்போமானால் தோழர்கள் சத்தியமூர்த்தி அய்யர், ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜ அய்யங்கார் இன்னும் ஏதோ இரண்டொரு சாஸ்திரியார்கள், ராவுஜீகள் ஆகியவர்கள் சேர்ந்து ஊர் ஊராய்ச்செல்வதும், இவர்களுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் 'இவர்களைக் காப்பாற்ற ஆங்காங்கு சில ரெட்டியார், முதலியார், கவுண்டர், செட்டியார், பிள்ளை, சாயபு ஆகிய கூட்டத்தைச் சேர்ந்த ஆசாமிகள் "ராமர் பின்னால் அனுமார்கள் (குரங்குகள்) சென்றன" என்பது போல் பயபக்தியுடன் சென்றுகாவல் காப்பதும், இந்த ஐயர், ஆச்சாரியார், அய்யங்கார், சாஸ்திரி, ராவுஜீ ஆகிய கூட்டங்கள் மேடைகளிலும், பத்திரிகைகளிலும் "கொடுங்கோலரக்கன் ஷண்முகம் இமயமலைபோல் வீழ்ந்தான், கொடிய ராட்சதன், பொப்பிலி ஒழிந்தான், அடிமைக்குலாம் கட்சியாகியஜஸ்டிஸ்கட்சிவெட்டிப் புதைக்கப்பட்டு விட்டது." "வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடுவோம வாருங்கள் வாருங்கள்" என்று கூவுவதற்கு தைரியம் ஏற்பட்டு விட்டதேயாகும்.

நமது மாகாணத்தில் எங்கெங்கு பார்ப்பனர்--பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி இல்லையோ அங்கும், எங்கு பார்ப்பன ஆதிக்கம் அதிகமோ அங்கும், எங்கு முழு மூடர்களும், துரோகிகளும் மலிந்திருக்கிறார்களோ அங்கும் பார்ப்பனர்களையே தேர்தல்களுக்குநிறுத்துவதும், எங்கு பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி இருக்கின்றதோ அங்கெல்லாம் முதல்தர சோணகிரிகளாகவும், பிறவி அடிமைகள் என்று மதிக்கக்கூடியவர்களாகவும், தங்கள் சுயநலத்துக்கு எதையும் விற்கக் கூடியவர்களாகவும் பார்த்து பார்ப்பனரல்லாதார்களை நிறுத்துவதும், அவர்களை வெற்றி பெறச் செய்வதும், பிறகு அவர்களைப்பின்னால் இழுத்துக்கொண்டு "ஜஸ்டிஸ்கட்சிவெட்டிப் புதைக்கப்பட்டது. குலாம்கள் ஒழிந்தார்கள்" என்று கூப்பாடு போடுவதும் ஆகிய காரியம் தான் இன்றைய காங்கிரஸ் வெற்றியாய் கொண்டாடப்படுகிறது என்றும் சொல்லலாம்.

பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியும், பகுத்தறிவும் இல்லையென்றால் பார்ப்பனர்கள் இவ்வித வெற்றிக்கொண்டாட்டம் கொண்டாடுவதிலும், "பார்ப்பனரல்லாதார் கட்சியை வெட்டிப்புதைத்து விட்டோம்" என்று அவர்கள் பறை அடிப்பதிலும் யாதொரு குற்றமும் இல்லை.

மடையர்கள் சுமக்க வேண்டியதும்,தந்திரக்காரர்கள் ஏறிச்சவாரி செய்யவேண்டியதும் இயற்கையே ஆகும். அந்த இயற்கைத் தத்துவத்தின் படிதான் இன்று இந்த நாட்டில் 100க்கு 97 மக்களாய் இருக்கக் கூடிய ராஜாக்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், முதலாளிமார்கள், பண்டிதர்கள், சகல காரியத்துக்கும் பாடுபடும் பாட்டாளி மக்கள் ஆகிய கூட்டத்தார்கள் தீண்டக்கூடாதாராய்,பறையராய், சக்கிலியராய், சூத்திரராய், கீழ் ஜாதியராய், பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்களாய், அடிமைகளாய், பார்ப்பனர்கள் காலைக் கழுவிக்குடிப்பவர்களாய், தாசிகளாய், தாசி மக்களாய் இருந்து வருவதும் 100க்கு மூன்றே பேராய்இருந்துவருமமககள், பிச்சை எடுத்துவாழும் மக்கள், உலகிலுள்ளசகல இழிதொழிலுக்கும்முன்னின்று அச்சக் காரம் (அட்வான்ஸ்) வாங்கும் மக்களாயிருந்தாலும் அவர்கள் இன்று பூதேவர்களாயும், பிராமணர்களாயும், ஆச்சாரிமார்களாயும், சுவாமிகளாயும், அய்யர்களாயும், மண்வெட்டியும் கோடாலியும் கையில் தொடுவது தோஷம் என்று சொல்லிக்கொண்டு ஒரு சொட்டு வேர்வை கூட நிலத்தில் விழுகாமலும், ஒரு கடுகளவுகவலையோ விசாரமோ கைமுதலோ இல்லாமல் வாழ்வு நடத்தக்கூடியவர்களாயுமிருந்து ஆதிக்கங்கள் செலுத்தப்பட்டுவருகின்றன.

இதே இயற்கைத்தத்துவம் தான் இந்தியாவில் உள்ள 35 கோடி மக்களையும், இவ்வளவு விஸ்திரணமுள்ள நாட்டையும் ஆயிரத்துக்கு ஒன்று வீதமுள்ள எண்ணிக்கை கூட இல்லாத அளவு வெள்ளைக்காரர்கள் இந்தியாவில் இருந்து கொண்டு சர்க்கஸ்காரன் மிருகங்களை நடத்துவதுபோல் நடத்தி ஆட்சி புரிந்து வர முடிகின்றது.

மற்றும் இந்த இயற்கை தத்துவம் தான் உழைக்கின்ற மக்கள் வயிற்றுக்கும், வயித்தியத்துக்கும் கூட போறாமல் பட்டினியினாலும் நோயினாலும் அவஸ்தைப்பட்டுக்கொண்டு கஷ்டப்படுவதும், பாடுபடாத சோம்பேரிகள் அப்பாட்டின் பலனையெல்லாம் தாங்களே அனுபவிப்பதும், மீதியை தாருமாறாய் பாழ்படுத்தி வருவதுமான கேடுகள் நடந்து வருகின்றன.

இந்த இயற்கைத் தத்துவம் தான் இன்றும் 20ம் நூற்றாண்டு மக்களைகாட்டுமிராண்டி வாழ்க்கைக்குக் கொண்டு போக முனைந்து நிற்கிறவரும், முதலாளி மார்களுடையவும், சோம்பேரி வாழ்க்கைக்காரர்களுடையவும், அடிமையுமான காந்தியாரை மகாத்துமாவாக்கியதுமாகும்.

இப்படிப்பட்ட மக்கள் வாழும் நாட்டில் உள்ளபார்ப்பனர்கள் "பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தைக்குலைத்து அவர்களது ஸ்தாபனத்தை வெட்டிப்புதைத்துவிட்டோம்" என்று சொல்லுவதில் இயற்கைக்கு விரோதமோ, அதிசயமோ ஏதும் இருப்பதாக நமக்குத்தோன்றவில்லை.

பார்ப்பனருக்கு ஆட்கள்கிடைக்கின்றன பணங்கள் கிடைக்கின்றன. ஏனென்றால் பார்ப்பனரல்லாத மடையர்களே ஏழைகளை வருத்தி சித்திரவதை செய்து கொள்ளை கொண்ட பணத்தை மானம், வெட்கம், அறிவு சிறிதும் இல்லாமல் மோட்சத்தின் பேரால், புண்ணியத்தின் பேரால், தேசத்தின் பேரால், தேசாபிமானத்தின் பேரால், கதரின் பேரால், தீண்டாமை விலக்கின் பேரால் கொட்டிக் கொட்டிக் கொடுத்துபார்ப்பனர்கள் பையை நிரப்பினால் பின்பு அவர்களுக்கு வேலைசெய்ய — உழைக்க-—மானத்தையும் மரியாதையையும் விற்க, சமூகத்துரோகத்தைச் செய்ய ஏன் ஆட்கள் கிடைக்காது என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

வெறிகொண்டமிருகங்கள் நீக்குப் போக்குஇல்லாமல்குலைப்பது போலும், கடிப்பது போலும் தோழர்கள் ஷண்முகம், வரதராஜுலு, ஏ. ராமசாமி ஆகியவர்கள் மீது பாய்ந்து அவர்களை ஒரு கூட்டம் வைகின்றன. இந்தவசவுகளையே பார்ப்பனர்களிடம் கூலி பெற்றுக்கொண்டுபார்ப்பனரல்லாதார்களே கூட சிலர் வைகிறார்கள் எழுதுகிறார்கள் என்றால் பார்ப்பனரல்லாத சமூகம் ஏன் அழியாது அல்லது ஏன் இன்னமும் இழிவான நிலைக்குப் போகாது அல்லதுபார்ப்பனரல்லாதார் சூத்திரர் என்றும், பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்கள் என்றும் எழுதிவைத்த சாஸ்திரங்களை மாற்றி இன்றைய தினம் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும், அவனது பெண்டு பிள்ளைகளைகொண்டு வந்து பார்ப்பனர்களுக்கு தங்கள் செலவில் விட்டுப்போகவில்லை யானால் அவன் நரகத்துக்குப்போவதோடு பெரிய தொரு தேசத்துரோகியாகவும்,சர்க்கார் குலாமாகவும் மதிக்கப்படுபவன் என்றுகூட ஏன் எழுதிவைக்கமாட்டார்கள் என்பதை யோசித்துப்பார்க்க வேண்டுகின்றோம்.

பார்ப்பனர்கள் முன்காலத்தில் நடந்து கொண்ட மாதிரிக்கும், இப்போது நடந்துகொள்கின்ற மாதிரிக்கும் கடுகளவாவது மானம், வெட்கம் இருந்தால் அவர்கள் பின் வைப்பாட்டி மக்கள் போல் திரிய யாருக்காவது எந்தப் பார்ப்பனரல்லாதாருக்காவது மனம்வருமா என்று கேழ்க்கின்

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க

# பகுத்தறிவு.

ஈரோடு, 1934-௵ நவம்பர்-மீ 25-௳

## ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரு வார்த்தை.

:0:

இந்திய சட்டசபை தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி தோற்றுவிட்டது; தேர்தலில் அதிகாரத்திலிருக்கும் கட்சிக்கு எப்பொழுதும் பலம் குறைவு என்பதையும் எதிர்கட்சியில் இருப்பவர்களுக்கு பலம் அதிகம் என்பதையும், அதிகாரத்தில் இருப்பவர்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆதலால் தேர்தல் வந்தால் எதிரிகளைவிட அதிகாரத்தில் இருப்பவர்கள் இரண்டு பங்கு பலமுடையவர்களாக இருக்கக்கணக்குப் போட்டுக்கொண்டால் தான் தேர்தலில் முகம் கொடுக்க முடியும்.

இன்றைய ஜஸ்டிஸ் கட்சியார் தங்கள் கட்சியில்யார் யார் இருக்கிறார்கள் என்று சொல்லுவதே முடியாத நிலையில் இருக்கிறார்கள். மந்திரிகள் வக்கிரமாகவே இருக்கிறார்கள். ஒரு சமயம் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்றாலும் அடுத்த மந்திரி பதவியும் தங்களுக்கே வரும் என்றால் தான் ஒற்றுமை என்று காட்டிக்கொள்வார்களே தவிர மற்றபடி ஒருவரை ஒருவர் கவிழ்க்கவே தபஞ் செய்து கொண்டிருப்பார்கள் என்று சொல்லவேண்டி இருக்கிறதற்கு வருந்துகிறோம்.

வெளியில் ஒவ்வொரு ஜில்லா தாலூக்காக்களில் உள்ள, ஜில்லா போர்டு 'பிரசிடெண்டு சேர்மன் முதலியவர்கள் அடுத்த தடவையும் பிரசிடெண்டு சேர்மன் ஆவதற்கு யாருடைய தயவு வேண்டுமோ அவருடைய கட்சிதானே தவிர மற்றபடி இன்று அவர்களுக்கு அதாவது பிரசிடெண்டுகள் சேர்மன்கள் என்பவர்களுக்கு எந்த கட்சியும் இல்லை எவ்வித அபிமானமும் கொள்கையும் இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

மற்றபடி சட்டசபை மெம்பர்கள் யோக்கியதையும் சொல்ல வேண்டியதில்லை. இந்த நிலையில் அடுத்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி எப்படி ஜெயிக்கும் என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும்.

தோழர்சுப்பராயன்அவர்களுக்குஒரு "கட்சி" இருக்கிறது. அவர்களுடைய கொள்கை எல்லாம் சுப்பராயனவர்களுக்குத் தானே எப்படியாவது மறுபடியும் மந்திரியாகவேண்டும்என்பதும், சுப்பராயன் அவர்களுடைய பின்பற்றுவோர்களுக்கு அதனால் தாங்கள் ஏதாவதுபயன் அடையவேண்டும்என்பதுமேயாகும்.

அதுபோலவே தோழர் முனிசாமி நாயுடு அவர்களுக்கும் ஒரு "கட்சி" இருக்கிறது. அவர்களது கொள்கையும் மேல் குறிப்பிட்டதுபோல தான்.

இதை நாம் இன்று குற்றமாக சொல்லவில்லை. ஏனெனில் காங்கிரசின் யோக்கியதையும் அப்படியே, சுதந்திரக் கட்சியின் யோக்கியதையும் அப்படியே, ஜஸ்டிஸ் கட்சியின் யோக்கியதையும் அப்படித்தான் என்று சொல்ல வேண்டிய நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது.

ஆகவே மந்திரியாவதற்கும், ஒருவரை மந்திரியாக்கி வைத்து அதனால்ஏதாவது உதவி மற்றவர்கள் பெறுவதற்கும் என்பதாக இன்று அரசியல் உலகத்தில் கட்சிகள் இருப்பது இன்றையமுறையில் குற்றம் என்று நாம் சொல்ல வரவில்லை.

தோழர் சுப்பராயன் மந்திரி தன்மையை கவிழ்த்ததற்கு பார்ப்பனர்கள் அஸ்திவாரமாக இருந்தார்கள் என்றாலும் பார்ப்பனரல்லாதார்கள் அதற்கு உதவியாய் இருந்து அவரை ஒழித்தது அக்கிரமமேயாகும். அவர் மந்திரி சபைசெய்த காரியங்களில் 10ல் ஒரு பாகம் கூட இன்று வந்த மந்திரிகள் சாதித்து விட முடியவில்லை. அதை ஒழித்த தோழர் முனிசாமி நாயுடு மந்திரி சபை சிறிப்புக்கு இடமாய் இருந்தது. அதாவது அவர் காலத்தில் தான் மந்திரிகள் உத்தியோகத்துக்காக எதையும் செய்வார்கள் என்று சொல்லக்கூடியவர்களுக்கு இடம்கொடுக்கப்பட்டது. பிறகு ஏற்பட்ட மந்திரி சபையும் உள்ளுக்குள் கரையான் அறிக்கின்ற மாதிரியாகவே கக்ஷி கட்டுப்பாடு இருந்து வந்தாலும் தோழர் பொப்பிலி ராஜா அவர்கள் இல்லாதிருந்தால் என்ன கதி ஆகிஇருக்குமென்று சொல்லமுடியாது என்றும் சொல்லுவோம்.

அடுத்த தேர்தலில் பொப்பிலி ஜெயிப்பார் என்று ½ அணு பந்தயம் கட்டச்சொன்னாலும் கட்டுபவர்கள் கிடைப்பது அரிதாகத்தான் காணப்படுகின்றது. ஏனெனில் அவ்வளவு பயம் ஏற்பட்டுவிட்டது. அப்படியானால் மற்றவர்களைப்பற்றிகேட்கவும் வேண்டுமா?

இந்த நிலையில் ஒரு கட்சியை வைத்திருப்பது என்பது அக்கட்சிக்கு மிகவும் அபாயகரமான காரியமாகும்.

ஆகலால் தோழர் பொப்பிலி ராஜா அவர்கள் இந்த சமயத்தில் துணிவாக ஒரு காரியம் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். அதென்னவென்றால் முதலில் கட்சியை உருப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தோழர்கள் சுப்பராயனையும், முனிசாமி நாயுடு அவர்களையும் ஜஸ்டிஸ் கட்சிக்குள் ஆக்கிக் கொள்ள வேண்டும். இது விஷயத்தில் கவலை இல்லாமல் இருப்பது புத்திசாலித்தனமாகாது.

அடுத்த சீர்திருத்தத்தில் 7, 8 மந்திரி ஸ்தானங்கள் வரப்போகின்றன. ஆளுக்கொரு மந்திரி எடுத்துக்கொண்டு தொலையட்டும் என்று தைரியமாம் இடம் கொடுக்க வேண்டும். சம்பளத்தில் பகுதியைக் கட்சிப்பண்டுக்கு உபயோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

சீர்திருத்த மந்திரிசம்பளங்களையும் ஒரு அளவுக்காவது குறைக்க ஒப்புக்கொள்ள வேண்டும் இவைகளைச்செய்ய முன் வராமல் அதைவிட்டுவிட்டு தனிஅறைக்குள் இருந்து கொண்டு பொருப்பற்ற ஆட்களுடனும் எப்படியாவது தன் காரியம் ஆனால் போதும் என்று வாழ்கின்ற ஆட்களுடன் கூடிப்பேசி முடிவு செய்து கொண்டு தைரியமாய் இருந்தால் அடியோடு நசுங்கிப்போக வேண்டி வரும் என்று இப்போதே எச்சரிக்கை செய்கின்றோம்.

பின்னால்வரப்போகும் சென்னை சட்டசபைத்தேர்தல் முடிவைப் பற்றி நாம் எழுதநேரிடும் போது இந்த வியாசத்தை எடுத்துப்போட்டு காட்ட வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதே நமது ஆசையே ஒழிய வேறில்லை.

எனவே அடுத்த மாத முதல் வாரத்தில் ஒருமீட்டிங்கி போட்டு வேலைத்திட்டங்களைப்பற்றி ஒரு முடிவு செய்துகொண்டு தோழர்கள் சுப்பராயன், முனிசாமிநாயுடு ஆகியவர்களையும் கலந்து ஏதாவது ஒரு கட்டுப்பாடு உண்டாக்கிக் கொள்ள வேண்டியது மிக அவசியம் என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இந்திய சட்டசபைத் தேர்தல் தோற்றுப்போனது நமக்கு ஒரு பெரும் வெற்றி அளிக்கக்கூடியதாய் முடிய வேண்டுமானால் இதைச் செய்ய வேண்டியது அறிஞர்கடமையாகும்.

## தோழர் வரதராஜுலு.

தோழர் வரதராஜுலு அவர்கள் தோற்றுவிட்டார் என்பதில் நாம் சிறிதும் ஆக்ஷேபிக்காமலும் ஆக்ஷேபிப்பதும் முடியாதகாரியம் என்றும் பலயான தோல்வி தான என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறோம். அவருக்கு ஜஸ்டிஸ் கட்சித்தலைவர் உள்பட அநேகர் ஆதரவளித்தார்கள் என்றாலும் தோல்வியே ஏற்பட்டது என்பது உண்மைதான்.

ஆனால் தோழர் ஷண்முகம் அவர்கள் தேர்தலுக்கும், தோழர் எ.ராமசாமி முதலியார் அவர்கள் தேர்தலுக்கும் நடந்த காரியங்கள் தோழர் வரதராஜுலு நாயுடு அவர்கள் தேர்தலுக்கும் நடந்ததா இல்லையா என்றால் நடந்தது என்று தான் சொல்லவேண்டும். அதுவும் நன்றாய் நடந்தது என்று தான் சொல்ல வேண்டும். தோழர் வரதராஜுலு அவர்கள் தேர்தலுக்கு நிற்கும் விஷயத்தைப்பற்றி தானே முடிவு செய்து கொள்ளாமல் தன்னையொத்த இரண்டொரு பார்ப்பனரல்லாத காங்கிரஸ்வாதி தேசபக்தர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களை கலந்து ஆலோசித்தார். அதில் சிலர் அவரை நிற்கச்சொல்லி கட்டாயப்படுத்தியதோடு தாங்கள் ஊர் ஊராய் கிராமம் கிராமமாய் தன் சொந்தத்தில் போய்க்கூட நாயுடுவுக்காகபிரசாரம்செய்வதாய் ஒப்புகொண்டு அவருக்கு உற்சாக மூட்டினார்கள். இதை நம்பியே தோழர் நாயுடு அரைகுறையாய் இருந்த மனதை கெட்டிப்படுத்திக்கொண்டார். அதோடு காங்கிரஸ் தலைவர்கள் என்னும் தென்னாட்டுப்பார்ப்பனர்களை தாராளமாக எதிர்ப்பதாகவும், அவர்களுடைய சூட்சுகளை வெளிப்படுத்துவதாகவும் ஒப்புக்கொண்டா

ர்கள். கடைசியாக வெற்றிதோல்வியைப்பற்றிக்கூடதான் கவலைப்படுவதில்லை என்றும், பார்ப்பன சூட்சியை வெளிப்படுத்த தன்னுடன் கூட ஒத்துழைத்தால் போதும் என்றும் சொல்லிக் கொண்டார். அதற்கெல்லாம் சம்மதம் கொடுத்து அவரை உற்சாக மூட்டிவிட்ட தோழர்கள் இரண்டொருவர்கள் பார்ப்பனர்களின் அடக்கு முறைக்கு பயந்து கொண்டு டாக்டர் நாயுடுவை காலே வாரிவிட்டு விட்டார்கள்.

வெளிப்படையாய் எதிரிகளாகவோ, பொறாமைக்காரர்களாகவோ இருந்தவர்கள் செய்யும் காரியங்களைப் பற்றியோ வையும், வசவுகளைப்பற்றியோ குறை கூறுவது பயங்காளித்தனமாகும். அதற்கு மார்பைக் காட்டவேண்டியதே ஆண்மையாகும். ஆனால் இந்த மாதிரி நம்பச் செய்து கழுத்தை அறுப்பது என்பது வெளிப்படுத்தித் தீரவேண்டிய காரியம் என்பதோடு பின்னால் மற்ற மக்களுக்கும் ஒரு படிப்பினைக்கு இதை பயன்படுத்திக் கொள்ளச் செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

நிற்க தோழர் வரதராஜுலுவின் யோக்கியதையை--தகுதியை நிர்ணயிக்க இந்த தேர்தலே ஒரு அளவு கருவியாகி விடாது.

ஜர்மனியில் ஹிட்லர் ஜெயித்து விட்டார். இன்றும் 100 தேர்தல் வைத்தாலும் அவரே தான் ஜெயிப்பார். அதனாலேயே அவர் ஜர்மனி ஜனப்பிரதிநிதியென்றோ அதற்கு தகுதியானவரோ யோக்கியரோ என்றோ சொல்லி விட முடியுமா? ஹிட்லரிசம் மிரட்டி ஓட்டு வாங்கினால் காந்தியம் (என்னும், பார்ப்பனீயம்) புரட்டி பித்தலாட்டங்கள் செய்து ஓட்டுப் பெறுகிறது. இதனால் (வெற்றி தோல்வியில்) மனிதர்களை அளந்து விட முடியாது.

இந்த நாட்டு மக்களின் இன்றைய அறிவின் அளவுக்கு சாமிகள் தாசி வீட்டுக்குப் போகும் உற்சவத்தை நிறுத்துவதற்கு என்று ஓட்டுக் கேட்டால் ஆயிரத்திக்கு ஒரு ஓட்டு கூட கிடைக்க மாட்டாது. அது போலவே கடவுள் பெண்களை நிர்வாணப் படுத்தி வேடிக்கை பார்க்கும் உற்சவத்தை நிறுத்த 10000க்கு ஒரு ஓட்டு விதம் கூட கிடைக்காது. கட்டின பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் பிரேரேபித்தவர்களும் ஆமோதித்தவர்களுமாவது ஓட்டுப்போடுவார்களா என்பது சந்தேகம்தான்.

இந்தமாதிரி ஜனங்களிடம் ஓட்டுப்பெறுவதினால் தோழர் வரதராஜுலுவின் யோக்கியதை போய்விட்டது என்று சொல்லப்படுமானால் வரதராஜுலு அவர்களைப் பற்றி எவரும் கவலைப்பட வேண்டியதில்லை.

அவரவர்களுக்கு உள்ள யோக்கியதை தேர்தலைப் பொருத்து அல்லவென்றும், தேர்தலில் வெற்றிபெற்றாலும் தோல்வியுற்றாலும் பொது நலத்தொண்டாற்றவேண்டிய அளவு தாராளமாய் இடமிருக்கின்றது என்றும் இதனால் யாரும் மூலையில் உட்கார்ந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆனால கட்சி நிலைமையைப்பொருத்துப் பார்ப்பதானால் அடுத்துவரும் தேர்தலில் பார்ப்பனரல்லாதார் கட்சி ஜெயித்து ஆகவேண்டும். காங்கிரஸ் ஜெயித்தால் கண்டிப்பாக பார்ப்பனீயம் வெற்றிபெற்றது என்றும் பார்ப்பனரல்லாதமக்கள் நிலை அதோ கதி ஆயிற்று என்றும் தான் முடிவு ஏற்படும்.

ஆதலால் தோழர் வரதராஜுலுநாயுடு அவர்கள் காங்கிரஸ் பார்ப்பனர்கள் ஆதிக்கஸ்தாபனம் என்பதை உண்மையாய் உணருவார்களானால் தைரியமாய் அதை இன்னும் வெளிப்படுத்தியே ஆகவேண்டும் என்றும் பார்ப்பனீயத்தை வெளியாக்கி அதை ஒழிப்பதே தேசபக்தி என்றும் ஜீவகாருண்யம் என்றும் கருதவேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## கோவை முனிசிபாலிட்டி.

கோயமுத்தூர் முனிசிபாலிட்டியில் திவான்பகதூர் C. S. ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் சுமார் 15 வருஷகாலமாக சேர்மனாக இருந்து வந்ததும் கோவை முனிசிபல் நிருவாகம் சென்னைமாகாண முனிசிபாலிட்டிகளில் எல்லாம் தலைசிறந்து விளங்கியதும் அந்தநிர்வாகத்தைப்பற்றி அரசாங்கயாதாஸ்தில் கோயமுத்தூர்முனிசிபல் நிர்வாகம் முதல்தர நிர்வாகத்தில் முதன்மையானதாக கருதப்படக் கூடியது என்று பல வருஷங்களாக குறித்து வந்ததும் யாவரும் அறிந்ததாகும்.

அப்படிப்பட்ட தோழர் C. S. R. அவர்கள் சென்றமூன்றுவருஷத்திய நிருவாகத்தின் கடைசி மீட்டிங்கில் கவுன்சிலர்கள் அவரைப் பாராட்டிப் பேசியதற்குப் பதிலளிக்கையில் தான் இதுவரை சேர்மென்அலுவல் பார்த்ததற்கும், அதற்காக தன்னைகவுன்சிலர்கள் பாராட்டியதற்கும் எல்லாம்கவுன்சிலர்களுடைய ஒத்துழைப்பே காரணம் என்று சொன்னதோடு தான் இனி சேர்மென் பதவியில் இருந்துவிலகிவிடுவதற்கு கவுன்சிலர்கள் அனுமதிக்க வேண்டும் என்றும் வேறு தக்கவரைதெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் தானும் ஒத்துழைத்து தன்னால் கூடியதை கவுன்சிலர் என்கின்ற முறையிலேயே செய்து வருவதாயும் தெரிவித்துக் கொண்டார்.

கவுன்சிலில் இருந்த காங்கிரசுக்காரர்கள் என்று தங்களைசொல்லிக் கொள்ளும் இரண்டொருவர்இந்த சங்கதியை தங்களுக்கு ஒரு ஆதாரமாய் வைத்துக் கொண்டு கலகத்தைமற்றகவுன்சிலர்களுக்குள்உண்டாக்க முயற்சித்தார்கள் என்னவென்றால் வேறு யார் வந்தாலும் வரட்டும், தோழர்ராவ்சாகிப்S.N. பொன்னையகவுண்டர் மாத்திரம் சேர்மனாய் வரக்கூடாதுஎன்றும் அதற்குக்காரணம் என்னவென்றால் தோழர் பொன்னையகவுண்டர்அவர்கள்பேருக்கு பலசாராயக்கடைகள், கள்ளுக்கடைகள் இருக்கின்றதென்றும் அவர்கள் காங்கிரசைஎப்போதும் தூஷித்து எதிர் பிரசாரம் செய்கின்றவரென்றும் அவர் வைஸ்சேர் மெனாய் வருவது கூட தங்களுக்கு அவமானம் என்றும் வீரம் பேசி அதன் மூலமாய் ஜஸ்டிஸ் கக்ஷியில் உள்ள ஒவ்வொருவரையும் போய் நீங்கள் சேர்மெனாய் இருங்கள் நீங்கள் சேர்மனாய் இருங்கள் என்று கோள்களும் குண்டுணிகளும் செய்து பார்த்தார்கள். இதைக் கண்ட தோழர் C S. ரத்தின சபாபதி முதலியார் அவர்கள் இவ்வளவு ஆனபிறகு தோழர் பொன்னையா அவர்களே சேர்மெனாய் வரவேண்டும் என்றும், காங்கிரஸ்காரர்கள் தங்களால் கூடியதை செய்து பார்த்துக் கொள்ளலாம் என்றும் அவர்களுடைய கோள்களுக்கும், குண்டுணித்தனத்துக்கும் அடிமைப்பட்ட சிலர் தமது கட்சியில் இருந்து விலகிவிட்டாலும் சரி என்றும் சொல்லி ஒரேபிடிவாதமாய் தோழர்பொன்னையா அவர்களையே சேர்மன் பதவிக்கு நிறுத்தினார்.

காங்கிரசுக்காரர்களுடைய விஷமம் பலிக்காமல் போகவே கடைசியாக தாங்கள் தோழர் பொன்னையா அவர்களைப்பற்றி பேசியது தவறு என்பதை உணர்ந்து அவர்களாகவே பொன்னையா அவர்களை ஆதரிப்பதாகவும், அவரோடு ஒத்துழைப்பதாகவும், அதற்கு கூலியாக தங்களுக்கு வைஸ் சேர்மென் வேலை கொடுக்க வேண்டும் என்றும் கெஞ்ச ஆரம்பித்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள சிலருக்கு இந்த மாதிரி நடவடிக்கை பிடிக்கவில்லையானாலும் தோழர் பொன்னையா எப்படியானாலும் வரக்கூடாது என்றும் அவர் உள்ள கவுன்சிலில் தாங்கள் இருப்பது அவமானம் என்றும் பேசிய வீரர்கள் அவர் தலைமையின் கீழ் அவருக்கு உபமாக இருப்பதற்கு ஒப்புக்கொண்டால் அவர்களுடைய யோக்கியதையை வெளியார் அறிவதற்கு இது ஒரு சந்தர்ப்பமாய் இருக்கட்டும் என்று மற்ற கவுன்சிலர்களுக்கு சமாதானம் சொன்னார். அந்தப்படியே முன் வீரம்பேசிய காங்கிரஸ்காரர் என்பவர்கள் பேசாமல், மூச்சு விடாமல் மரியாதையாக தாங்களாகவே தோழர் பொன்னையா அவர்களை ஆதரித்தார்கள். தங்களுக்கு ஒரு ஸ்தானம் எறியப்பட்டவுடன் கள்ளுக்கடை சாராயக்கடை வியாபாரம் எங்கேயோ பறந்துபோய் விட்டது போலும்.

இதன் பயனாய் ஒரு பார்ப்பனர்தான் வைஸ் சேர்மனாய் வரக்கூடும் என்பதாகவும் தெரிகிறது ஆகவே காங்கிரஸ்க்காரர்கள் என்பவர்களின் யோக்கியதையும் அவர்களுடைய திட்டங்களும் அவர்கள் அதை எதற்கு உபயோகிக்கிறார்கள் என்பதும் கடைசியாகக் காங்கிரஸ் வெற்றி என்பதெல்லாம் எப்படிபார்ப்பனர்களையே போய்ச் சேருகிறது என்பதும் இதிலிருந்தாவது கோவைவாசிகளும், மற்ற ஊர்வாசிகளும் உணர்வார்களென்று கருதுகிறோம்.

## தோழர் ஈ. வெ. ராமசாமி.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தோழர்கள் அ. பொன்னம்பலனார், T. V. சுப்பிரமணியம் ஆகியவர்களுடன் 24-11-34ந் தேதி இரவு சென்னை சென்றிருக்கிறார்.

(9ம் பக்கத்தொடர்ச்சி)

றோம்.

பார்ப்பனரல்லாதார்க்கு இனியாவது மானம், ரோஷம் வந்து தங்கள் சமூக நலனுக்குழைக்க வேண்டும் என்று தான் நாம் இந்தப்படி எழுதுகின்றோமே ஒழிய துவேஷத்துக்காக அல்ல.

பார்ப்பனரல்லாதார் அல்லது தோழர்கள் ஷண்முகம், வரதராஜுலு, ஏ. ராமசாமி முதலியார் ஆகியவர்கள் தேசத்துக்கு, அல்லது தனிப்பட்ட நபருக்குச்செய்தமோசம், துரோகம் அல்லது இழிவான காரியம் என்ன என்று எந்த பார்ப்பனரல்லாதாராவது சொல்ல முன் வரட்டும்.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களுடைய யோக்கியதையைவிட தோழர்கள் ராஜன், ராஜகோபாலாச்சாரிஆகியவர்களுடைய யோக்கியதையைவிட ஷண்முகம், வரதராஜுலு, ராமசாமி முதலியார் ஆகியவர்கள் எந்தவிதத்தில் குறைந்தவர்கள் என்று பந்தயம் கட்டி கேட்கின்றோம்.

தோழர்கள் சத்தியமூர்த்தியும், ராஜகோபாலாச்சாரியாரும் என்றைக்காவது தங்கள் ஜாதி அபிமானத்தை விட்டுக்கொடுத்து நடந்திருக்கிறார்களா?

தோழர் சத்தியமூர்த்தியை தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடும் பார்ப்பனரல்லாதார்கள் தங்கள் உடலில் பார்ப்பனரல்லாதார் ரத்தமோ அல்லது நாணயம், ஒழுக்கம், என்கின்ற தத்துவமோ கடுகளவு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள அருகதை உடையவர்களாயிருந்தால் தோழர்கள் ஷண்முகம், வரதராஜுலு, ராமசாமி முதலியார் இவர்களை விட தோழர் சத்தியமூர்த்தி எந்த விதத்தில் யோக்கியர் என்பதை மெய்ப்பிக்கட்டும் என்று கேழ்க்கின்றோம்.

எதற்கும் ஒரு அளவு உண்டு. அளவுக்கும் மீறுவது என்றால் அதை இரண்டில் ஒன்று பார்க்க வேண்டியநிலை என்றுதான் சொல்லுவதோடு வைவதும், காலித்தனம் செய்வதும் பார்ப்பனருக்கும் காங்கிரசின்பேரால் பிழைக்கின்றவர்களுக்கும்தான் ஏக போக உரிமை என்பதை எப்படியாவது ஒழிக்கவேண்டிய நிலை என்றும்தான் சொல்லுவோம்.

காங்கிரசுக்கும், கதருக்கும் சம்மந்தமில்லை என்று கதரின் பேரால் வசூலித்த பணம் தேர்தல்களுக்கு செலவு செய்யப்பட்டது யாரும் அறியார்களா, கதரின் பேரால் மாதம் 100, 200 பணம் வாங்கிப்பிழைக்கும் ஆட்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கவில்லையா? தீண்டாமை விலக்கின் பேரால் வசூலித்த பணத்தில் மாதம் 40, 50, 100 சம்பளமாகவும் வேறு படிபிடி செலவுக்காகவும் என்று வாங்கிப் பிழைக்கும் ஆட்கள் தேர்தலில் பிரசாரம் செய்யவில்லையா? இதெல்லாம் நாணயமான யோக்கியமான காரியமா என்று கேழ்க்கின்றோம்.

இந்தியசட்டசபையில் கோவில் பிரவேசமசோதா கொண்டுவரச்செய்து ஜனங்களை தீண்டாமை விலக்கின் பேரால் ஏமாற்றி பார்ப்பனரல்லாதாரிடம் ஏராளமாய் பணம் வசூல் செய்து கொண்ட பிறகு அந்த மசோதாவை வாபீஸ் பெரும்படி செய்துவிட்டு இந்திய சட்டசபைத்தேர்தல்களின் போது இனிமேல் அந்த மாதிரியான மசோதா கொண்டுவருவதில்லைஎன்றும், வேறுயாராவதும் கொண்டுவருவதாயிருந்தாலும் ஓட்டுக்கொடுப்பதில்லை என்றும் சொல்லி பார்ப்பனர்களுக்கு வாக்குக்கொடுத்து தேர்தல் பிரசாரம் செய்துவெற்றி பெற்றுவிட்டு மானமில்லாமல்வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடுவதென்றால் இதற்கு எதை சமானமாகச் சொல்லுகிறது என்பது நமக்கு விளங்கவில்லை.

வெற்றி கொண்டாட்டம் என்று சொல்லுவதெல்லாம் காங்கிரசின் நாணயக்குறைவும், பார்ப்பனர்களின் சூட்சியும் ஜெயித்துவிட்டது என்று சொல்லுவதை விட வேறு என்ன என்று கேட்கின்றோம்.

தோழர் சத்திய மூர்த்தியோக்கியதை நமக்குத்தெரியாது என்று நினைத்துக்கொண்டு அவரைத் தோளின் மீது தூக்கி வைத்துக் கொண்டு திரிகின்றவர்கள் இந்தக் கும்மாளம் போடுகின்றார்களா? அல்லது தெரியும் என்று நினைத்துக்கொண்டே பசிவெட்கமறியாது என்பது போல் கூலிக்காசைப்பட்டு இம்மாதிரி அவரைப்புகழ்கின்றார்களா என்றும் கேழ்க்கின்றோம்.

தோழர் ராஜகோபாலாச்சாரியவர்கள் இதுவரை நடந்துவந்ததும், அவரது உள் எண்ணமும் இந்தியா பூராவும் உள்ள அறிஞர்கள் அவரைப்பற்றி கொண்டுள்ள எண்ணமும் நமக்குத் தெரியாது என்று இவர்கள் கருதுகின்றார்களா என்று கேட்கின்றோம். தோழர் டாக்டர் ராஜன் அவர்களின் யோக்கியதை தான் என்ன? இவர்கள் எல்லோரும்வருணாச்சிரம ராஜாபகதூரை விட எந்த விதத்தில் மேலானவர்கள் என்று பார்ப்பனக்கூலிகளையே கேழ்க்கின்றோம்.

குருகுலப்போராட்டம் வந்த காலத்தில் தோழர் வரதராஜுலு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்ததுடன் காங்கிரஸ் கமிட்டியில் இருந்து ராஜினாமா கொடுத்து விட்டு ஓடிய "சீர்திருத்தக்காரர்கள்" தான்என்பதை உலகம் அறியாது என்று கருதிக்கொண்டிருக்கிறார்களா என்று கேழ்ப்பதோடு இந்த சீர்திருத்த வாதிகள் இரவும் பகலும் புராணப்பிரசங்கம் செய்து கொண்டு எப்படி எப்படி பார்ப்பனரல்லாதார் குடியைக் கெடுப்பது என்று பிளான் போட்டுக் கொண்டு இருக்கிறதே அல்லாமல் இவர்கள்தேசத்துக்கும் சமூகத்துக்கும் நாளது வரை செய்த ஒரு காரியமோ, ஒரு பயனோ இன்னது என்று எடுத்துக்காட்டமுடியுமா என்று கேழ்க்கின்றோம்.

தோழர் சாமி வெங்கிடாசலம் செட்டியார் தான் ஆகட்டும் எதைச் சாதித்தவராய்இருப்பார்? அல்லதுஷண்முகத்துக்குமேலாக இவர்எத்தனை தடவை ஜெயிலுக்குப்போயிருப்பார்.

சைட்பிசகாய் இவருடைய பெயர் ஓட்டர் லிஸ்டில் பதிக்கப்பட்டுவிட்டது என்பதைத்தவிர இவர் உண்மையிலேயே அந்தத் தொகுதி ஓட்டருக்கு லாயக்குள்ளவரா? என்றும் கேட்கின்றோம்.

செத்துப்போனவர்கள் எத்தனை பேர் எழுந்து வந்து தோழர் சாமி வெங்கடாசலத்துக்கு ஓட்டுப்போட்டு விட்டுப் போனார்கள்என்பதைக்கவனிக்கப் போனால் எலக்ஷன் நிலைக்குமா? என்றும் கேட்கின்றோம்.

மற்றும் சமீபகாலம் வரை ஜஸ்டிஸ் கட்சியை தொங்கிக்கொண்டிருந்ததும், அபேட்சகராய் தெரிந்தெடுக்கப்படும் வரையில் காங்கிரசையே வைது கொண்டிருந்ததும் யாருக்கும் தெரியாதா என்று கேட்கின்றோம்.

இவைகள் எப்படியோ போகட்டும் என்றாலும், இந்திய சட்டசபைத் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்ற வீரர்களுக்கும், அவர்களுக்கு உழைத்த வீரர்களுக்கும், வெற்றியின் பேரால் வெற்றிக்கொண்டாட்டம் கொண்டாடும் வீரர்களுக்கும் என்ன கொள்கை இருக்கின்றது? சட்ட சபையில் போய் இவர்கள் செய்யப்போகும் காரியம் தான்என்ன? என்பதைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லக் கூடுமாஎன்று கேட்கின்றோம், "ஜஸ்டிஸ் கட்சிக்கு கொள்கை இல்லை" என்று சொல்லும் இவர்களை (காங்கிரசுக்காரர்களை) உங்கள் கொள்கை என்ன என்று கேட்டால் என்ன பதில் சொல்லக்கூடும்.

எலக்ஷனில் யாதொரு கொள்கையும் சொல்லாமல், காந்தியாருக்கு ஓட்டுப் போடுங்கள், காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்பதும், காந்திக்கும் காங்கிரசுக்கும் எதற்காக ஓட்டுப் போடுவது என்று கேட்டால், ஜெயிலுக்குப்போனதற்காகவும், அடிபட்டதற்காகவும் ஓட்டுப் போடுங்கள் என்று சொல்வதும், ஜெயிலுக்கு போனதினாலும், அடி பட்டதினாலும் ஏற்பட்ட பலன் என்ன என்று கேட்டால் ஜெயிலுக்குப் போனதும் அடி பட்டதும் முட்டாள் தனம் என்று கண்டுபிடிக்கப்பட்டு இப்போது சட்டசபைக்குப் போகவேண்டும் என்று தீர்மானித்து இருக்கிறோமே அதுதான் என்றுசொன்னதும் அல்லாமல் வேறு கொள்கை என்ன என்று இப்போதும் கேட்கின்றோம்.

வெள்ளை அறிக்கையை நிராகரிக்கப் போகின்றோம் என்று சொன்ன சிலர்களை வெள்ளை அறிக்கையை நிராகரிக்கமுயற்சித்து தீர்மானம் தோல்வி அடைந்தபின்போ, அல்லது வெற்றிபெற்ற பின்போ அப்புறம் என்ன செய்யப் போகின்றீர்கள்என்றும்நீங்கள்செய்ததீர்மானத்துக்கு எவ்வளவு யோக்கியதை உண்டு என்றும் கேட்ட கேழ்விக்கு நாளது வரை என்ன பதில் சொல்லப்பட்டது என்று கேட்கின்றோம்.

யாதொரு கொள்கையும் இல்லாமல் மக்களின் முட்டாள் தனத்தையே முதலாக வைத்து செய்த ஏமாற்று வியாபாரத்தில் வெற்றி பெற்றுவிட்டால்அதற்காக இம்மாதிரி குடிகாரன்வெறிகாரன்போல் எல்லோரையும் வாயில் வந்தபடி கீழ்மக்கள் போல் வைது கொண்டுதான் வெற்றிக்கொண்டாட்டம் கொண்டாடுவதா என்று கேட்கின்றோம். இது எதை நிரூபிக்கின்றது என்றால் பார்ப்பனர்களின் சூட்சியில் இருந்து இந்திய மக்களை விடுவிக்க வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமான காரியம் என்பதையும் பாமர மக்களுக்கு தனித் தொகுதியே அவசியமானதென்பதையும் நிரூபிக்கிறது என்று தான் சொல்லுவோம்.

தகப்பன் வீட்டுப்பெருமையை தமையனிடம் சொல்லும் தங்கச்சிபோல் பஞ்சத்துக்காக வந்த

காங்கிரசிற்குள் புகுந்து கொண்ட இந்த பச்சகானு கூட்டம் தோழர் வரதராஜுலு நாயுடுவுக்கும், சர். ஷண்முகத்துக்கும் காங்கிரஸ் பெருமையைப்பற்றி போதிப்பதென்றால் அதில் எவ்வளவுஞானம்இருக்கின்றது என்றுதான் கேட்கின்றோம்.

ஏறக்குறைய இந்த 15 வருஷ அனுபோகத்தில் யார் யார் காங்கிரசைவிட்டு வெளியில் போனால் தாங்கள் சொந்தத்தில் வாழ முடியுமோ பிழைக்க முடியுமோ அவர்கள் எல்லோருமே சற்றேறக்குறைய காங்கிரசைவிட்டு வெளியேறித்தான் இருக்கிறார்கள். மற்றும் சிலரும் வெளியேறிப் பார்த்து அங்கும் வாழ்வுக்கு வழியில்லாமல் போனதினாலேயே திரும்பவும் போய்ப் புகுந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இது யாருக்குத்தெரியாத இரகசியம் என்று கேட்கின்றோம்.

ஜீவனத்துக்கு வேறு எந்த வழியும் இல்லாத ஆட்கள் பலர் இந்தக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டு சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படும்படியாகவும், காதில்கேட்பதற்கே அசிங்கமாயிருக்கும்படியாகவும் பலர் கத்துவது நம் காதுக்கு வந்து கொண்டிருக்கின்றது. இந்த மாதிரியான ஆட்கள் சிலரைப் பிடித்து அவரது ஜீவிதம் எப்படி நடக்கின்றது என்று விசாரித்தால் நல்ல நடவடிக்கைக்கு ஜாமீன் வாங்கவேண்டியதைத்தவிர வேறு ஒன்றுமே செய்ய வழி இருக்காது. ஆனால் அப்படிப்பட்ட பலர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய அதிகாரிகள் ஜாதி அபிமானம் காரணமாக விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது. இந்த யோக்கியதையில் உள்ள காங்கிரசுதான் நீதியும், சத்தியமும், அகிம்சையும் கொண்ட முறையில் சுயராஜ்யம் பெருவது என்பதைக்கொள்கையாகக் கொண்டிருக்கின்றதாம். என்ன பித்தலாட்டம், எவ்வளவு நாணயக்குறைவுஎன்று பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

வெகு காலமாகவே நாம் காங்கிரசுக்காரர்கள் கூட்டத்தில் சென்று யாரும் கலகம் செய்யக்கூடாது என்றும் சொல்லிவந்ததானது காலித்தனத்தை காங்கிரசுக்கே சொந்தமாக்கி விட்டது போல் காணுகின்றது.

காங்கிரசுக்காரர்கள் தடபுடலையும், அவர்களது வசவையும், காலித்தனத்தையும் கண்ட பலர் பயந்து கொண்டு மெள்ள மெள்ள காங்கிரஸ்கூட்டத்தோடு தங்களைக் கலக்கிக்கொள்ள பலர் ஆசைப்படுவதைப் பார்க்க நமக்கு சிறிப்பாக இருக்கின்றது. இருந்தாலும் இப்படிப்பட்ட கூட்டத்தார் மறுபடியும் 8 நாளில் கண்டிப்பாய் திரும்பவும் ஓடிவந்துவிடப் போகிறார்கள் என்று இப்போதே ஜோசியம் கூறுவோம்.

---

(7ம் பக்கத்தொடர்ச்சி)

யுடன் எதிர்பார்க்கிறேன் அந்தப்படி செய்வதில் சில பணக்காரர் சுயநலக்காரரின் வருத்தம் ஏற்படலாம் அவற்றை லக்ஷியம் செய்யாமல் ஊர் பொது நன்மையே பெரிதெனப்பாவித்துநடு நிலைமையில் நல்ல ஏற்பாடு நடைபெறும் என்று நம்பி எதிர்பார்க்கிறேன்.

### குழந்தை வளர்ப்பு.

குழந்தை வளர்ப்பு விஷயத்தில் நம் நாட்டு மக்களுக்குக் கொஞ்சமும் கவலையே கிடையாது. குழந்தை வளர்ப்பு விஷயத்தில் அந்தந்த தாய்தகப்பன் மார்களை விட அரசாங்கம் அதிக அக்கரை யெடுத்துக்கொள்ளவேண்டும். மேல் நாட்டில் ஒவ்வொரு நகரத்திலும் குழந்தை வளர்ப்புக்கென பொதுவிடங்கள் அமைத்து அங்கு சில ஆயிமார்களை நியமித்து சுகாதார முறைப்படி குழந்தைகளை வளர்க்கப்படுகின்றன. மற்றும் சில குடும்பத்தார்கள் தங்கள் சொந்த பொறுப்பிலும் ஆய்மார்களை நியமித்துகுழந்தைகளை மிகவும் தேகாரோக்கியமாக வளர்க்கப்படுகின்றனர். சுருக்கக்கூறில் மேல் நாட்டில் ஏழை முதல் எல்லா பணக்காரர்வீட்டுக் குழந்தைகளும் ஆய்மார்கள் மூலமாகவே வளர்கின்றன. மேல் நாட்டில் நான் பார்த்த ஒரு சாதாரண குடும்பத்தில் ஒரு குழந்தையின் தாய் தன் குழந்தையை வேறு ஒரு ஆயா வசம் வளர்க்க ஒப்புவித்துவிட்டுத்தான் வேறு ஒரு வீட்டுக் குழந்தையை வளர்க்கும் வேலையில் அமர்ந்திருந்தாள் இதற்குக்காரணம் என்ன வென்று கேட்டதில் தன் குழந்தையை வளர்க்கத் தான் மாதம் 20 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகவும், தான் வளர்க்கும் குழந்தையின் பெற்றோர் தனக்கு மாதம் 60 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகவும் அந்த அம்மாள் சொன்னார். இந்தப்படி மேல்நாட்டார்கள் குழந்தைகளை ஆய்மார்கள் மூலம் வளர்க்கப்படுவதால் குழந்தைகளுக்குமதாய்மார்களுக்கும் தனித் தனியே சுகாதாரமும் தேகாரோக்யமும் நல்ல வாழ்வும் ஏற்படுகின்றன. நம் நாட்டிலோ அந்த வழக்கமில்லை. நம் நாட்டுப் பெண்கள் குழந்தைகள் பெறும் விஷயத்திலும், வளர்க்கும் விஷயத்திலும் இன்னும் மிருகப் பிராயத்திலேயே இருந்து வருகிறார்கள். மற்ற விஷயங்களை விட இந்த குழந்தை பிரசவ விஷயமும், பின் குழந்தைகள் வளர்ப்பு விஷயமும் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியதாகும். அதோடு பிரசவ பெண்கள் பிரசவத்துக்கு முன்னும் பின்னும், பிரசவ காலத்திலும் நடந்து கொள்ளவேண்டிய விஷயத்தை அவர்களுக்கு நாம் நன்கு எடுத்துரைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.''

பின்பு தலைவர் முடிவுரையில் தோழர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கூறிய விஷயங்கள் நமது நகரத்துக்கு மிகவும் அவசியமானதென்றும், தாம் தம்மாலியன்ற அளவு ஒத்துழைப்பதாகவும் கூறினர். பிறகு வந்தனோபசாரம் கூறிய பின்னர் கூட்டம் கலைந்தது.

---

## திருநாவுக்கரசு சபை.

20-11-34 இரவு 8 மணிக்கு இச்சபாவின் கூட்டம் விழுப்புரம் தாலூக்கா அன்னியூர் சப்ரிஜிஸ்டரார் திருவாளர் எஸ். பூவராகன் பி. ஏ. அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. அவ்வமயம் மணவை குமாரகுரு முதலியார் அவர்களால் கைத்தொழில் கல்வி என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. பின் தோழர் ஜெ என். ராமநாதன் அவர்கள் இறந்ததற்கு ஷேயார் வருந்துவதாகவும், இச்சபையின் அனுதாபத்தை ஷேயார் குடும்பத்திற்குத் தெரிவித்துக்கொள்வதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேறியது எனகாரியதரிசி எழுதுகிறார்.

---

## இராமநாதபுரம் ஏழூர் பத்து வாலிபர் சங்கம்.

இச்சங்கத்தின் ஆரம்பக்கூட்டம் சென்ற 19-11-34உ திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தென்கரையில் தோழர் கே. வி. வேலுசாமி அவர்களின் தலைமையில் கூடியது.

கூட்டத்திற்கு பக்கத்து ஊர்களிலிருந்து ஏராளமான வாலிபர்கள் விஜயம் செய்திருந்தார்கள் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டதின்நோக்கத்தையும், சங்கத்தின்அவசியத்தையும், அதை ரிஜிஸ்டர்செய்யவேண்டியதின் அத்தியாவசியத்தையும் விளக்கிக் கூறினர். அங்கத்தினர் பின் சிலரை சங்கத்தின் நிர்வாகசபைகளாக தெரிந்தெடுக்கப்பட்டபின் கூட்டம் கலைந்தது என ஒருநிருபர் எழுதுகிறார்.

---

## தோழர் அ. பொன்னம்பலம் சுற்றுப்பிரயாணம்.

தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள்18-11-34 முதல்மேலூர் சிங்கம்புணரி, திருப்பத்தூர், திருக்கோஷ்டியூர், காரைக்குடி, கானாடுகாத்தான், புதுக்கோட்டை, ஸ்ரீரங்கம், திருச்சி முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு 24-11-34 காலை ஈரோடு வந்து சேர்ந்தார்.

## சித்தையன் கோட்டையில் கலப்புமணம்.

சென்ற 21-11-34ந் தேதியில், இவ்வூர் மருத்துவம்மாளுடையமகள், திருமதி மேரிக்கும், சாணார்பட்டியை சேர்ந்த, எமக்களாபுரம், மிராஸ்தார் தோழர், பெரியசாமிக்கும் மணமகளுடைய இல்லத்தில் கலப்புமணம், நடந்தது. மணமக்கள்யாதொரு, சடங்குகளின்றி மாலைமாற்றிக்கொண்டார்கள். ஷை திருமணத்திற்கு, வந்தவர்கள் தோழர் வி. எஸ். பூமால்சாமி, ரா. ஆ. ராமசாமி, ரா. லகுமய்யா, வி. கே. பழனிச்சாமி, வி. எஸ். காசிவிஸ்வநாதன், சேகு முகமது, சாணார்பட்டி போஸ்ட்மாஸ்டர், இன்னும் பலதோழர்கள் வந்திருந்தார்கள். பிறகு, எல்லோருக்கும், சந்தனம், (தாம்பூலம்) வெற்றிலை, வழங்கினார்கள். பின் திருமணம் இனிது முடிந்தது.

---

## மாணிக்கம்மாள் யூனியன் மெம்பர்.

சென்னிமலைடவுன் யூனியன்போர்டுக்கு நடந்த எலக்ஷனில் 3வது வார்டுக்கு தோழர் எம். மாணிக்கம்மாள் போட்டியில்லாமல்தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று சித்தய்ய ஓதுவார் தெரிவிக்கிறார்.

---

## மேலூரில் சுயமரியாதைப்பிரசாரம்.

மேலூர் ட்ராமாக் கொட்டகைக்கு முன்பாக 18-11-34 ஞாயிற்றுக் கிழமை மாலை5-30 மணிக்கு தோழர் வேலுசாமி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அதுசமயம் தோழர் அ.பொன்னம்பலம் அவர்கள் "சமூகசீர்திருத்தம்" என்பதுபற்றி நீண்ட நேரம் விரிவாயும் விளக்கமாயும் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றி கூறிய பின் கூட்டம் 7-30 மணிக்கு இனிது முடிந்தது.

---

## சிவகெங்கை யூனியன் போர்டு தலைவர் தேர்தல்.

சிவகெங்கை யூனியன் போர்டுக்கு தலைவராகத் தோழர் S. R. M. வெங்கடாசலம் அவர்கள் அதிகப்படியான ஓட்டுகளால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். உபதலைவராக தோழர் சுப. அருணாசலம் அவர்கள் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பெற்றார் என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

---

## கானாடுகாத்தான் யூனியன் போர்டு தலைவர் தேர்தல்.

கானாடுகாத்தான் யூனியன் போர்டு தலைவராகத் தோழர் சி. வி. சி. டி. வி. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றாரென்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

# சமதர்மத்தில் பெண்கள்.

சமதர்மக்கொடியின்கீழ்ஆடவரும், பெண்களும் தொழிலாளிகளாகவே இருப்பார்கள். இதன் முழுக்கருத்தையும் நாம் தெளிவு பெற உணரவேண்டியது அவசியம். சமதர்மத்தைப்பற்றி ஆரம்பப்பாடம் படிக்கிறவர்கள் கூட, சமதர்ம சகாப்தத்தில் ஆடவர் எல்லோரும் உழைப்பாளிகளாகவே யிருப்பார்களென்று கூறினால் அப்படியே ஒப்புக்கொள்வார்கள்; ஆனால் பெண்கள் எல்லோரும் உழைப்பாளிகளாக இருப்பார்களென்று கூறும்போது அநேகருக்கு ரகசியமாகவே இருக்கிறது. வருங்காலத்தில் தொழில் விஷயத்தில் பெண்கள் நிலைமை என்ன என்பதைப் பற்றி அநேகர் உள்ளத்தில் இன்னும் பெருங்குழப்பம் நுரைவிட்டுக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் ஏற்படப்போகும் உன்னதமான சமுதாய வாழ்வில், பெண்கள் வேலைசெய்ய வேண்டிய அவசியத்திலிருந்து பூரணமாக விடுதலையடைவார்களென்பது பலரின் யூகம். பெண்கள் தங்களுக்குரிய தனியான குடும்ப அலுவல்களைத் திருந்தச் செய்வதிலேயே தங்களுடைய புத்தியையும் சக்தியையும் தத்தம் செய்வார்களென்றும், குடும்பவிவகாரத்திலும் இல்லறகாரியத்திலுமே தங்களுடையமுழு உழைப்பையும்வரையறுத்துக் கொள்வார்களென்றும் மற்றவர் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த இரண்டுவித எண்ணங்களும் தவறு. இவை முன்னேற்றத்தின் நேரடியான முட்டுக்கட்டைகள் இவ்அபிப்பிராயங்கள் மனித வாழ்க்கையின் பரிணாமத்தை ஒட்டியதாயில்லை. அவை மனித வர்க்கம் கீழ்த்தர சமூக வாழ்க்கைக்குத் திரும்பிச்செல்வதைக் குறிப்பிடுகின்றன. எனவே பொய்.

சமதர்ம சகாப்தத்தில், பெண்மக்கள், வேலை செய்ய வேண்டிய பொறுப்பு துளிகூட இல்லாது ஹாய் ஆகத்திரிவார்களென்றால், அது மனிதவர்க்கத்தின் முற்போக்கன்று, கீழ்த்தரமான பிற்போக்கே யாகும். அது பெண்ணினத்தையே அந்தப்புரத்திலிருக்கும் ஸ்திரீகளுக் கொப்பாகத் தாழ்த்திவிடும். அது சமதர்மத்தை அசாத்தியமான சங்கதியாக்கி விடும் ஒருக்கால் சத்தியமாக்கினாலும், மனிதவர்க்கம் வெகு வேகமாக க்ஷீணதசையடைந்து, பூரணமாகப் பூண்டற்றுப் போகத்தக்க தாண்டு கோலாயிருக்கும். சமதர்ம நாளிலும் பெண்மக்கள் தங்கள் சக்தியையும் புத்தியையும் குடும்ப விவகாரத்திலும் இல்லறகாரியத்திலுமே விநியோகிப்பார்களானால், அவர்களுடைய நிலைமை, இயந்திரங்களும், நீராவி சக்தியும் மின்சார சக்தியும் தோன்றுவதற்கு முன்னிருந்த காலத்தைப்போலவே இருக்கும். வேலை செய்யாத வாழ்வு, பெண்களைப்பொது வாழ்க்கையிலிருந்து துண்டித்து விடும்; அவர்களால் சமூகத்திற்கு ஏற்படும் பிரயோசனத்தை நஷ்டமாக்கும், அவர்களைப் பொருளாதார அடிமைத்தனத்தில் ஆழ்த்தும், இந்நிலைமை, அவர்களுக்கு நல்லசந்தர்ப்பத்தைஅளிப்பதாகாது. பழைய அடிமைத்தனம் புதிய போர்வையில் காட்சி கொடுப்பதாகவே முடியும். மேலும், வருங்காலப் பெண்களை,குடும்ப விவகாரத்திலும், இல்லற காரியத்திலும் மாத்திரமே மாட்டிவைப்பது முடியாதகாரியம் ஏனென்றால், பிரயோஜனகரமாக வேலைசெய்யத்தகுந்த, ஆரோக்கியமுள்ள பெண்களுக்கு அங்குப் போதிய வேலையில்லை. இக்காலத்தில், நமது பாட்டிமார்களைக் காலையிலிருந்து இரவுவரையில் சுறுசுறுப்பாக வேலைவாங்கிக் கொண்டிருந்த அநேக குடிசைக்கைத் தொழில்கள் இருந்த விடந் தெரியாமல் மறைந்து போயின. குழந்தைகளின் படிப்பும் சமூக விஷயமாக மாறி விட்டது. மக்கள் முன்னேற்றமடைய அடைய, தொழில்கள்யாவும், பொதுவாக்கப்படுவதோடு பொதுக்கல்வியும் சிறந்தமுறையில் அபிவிருத்தியடையும். பெண்களின் வேலை, வீட்டை விட்டுவெளியேறி, ஸ்டோர்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும், ஆபீஸ்களுக்கும் ரஸாயனசாலைகளுக்கும் (Laboratory) பள்ளிக்கூடங்களுக்கும்சர்வகலாசாலைகளுக்கும் சென்று விடும். பெண்களின் வேலையென்பது மாறி, மனிதர்களின் வேலை என்றேற்படும். பெண்கள் எல்லோரும் வீட்டிலுள்ளேயே இருந்து செய்யத்தகுந்த அவ்வளவு வேலை இன்றுகுடும்பங்களில் இல்லை. எதிர் காலத்தில் இதைவிடக்குறைந்து விடும். இயந்திரங்களுக்குப்பதிலாக இனி மேல் ஒருநாளும் கைக்கருவிகள் (Manual tools) வரவேவராது. குடிசையில் செய்யப்படும் மெழுகுவர்த்திகளை ஏற்றுக் கொண்டு, மின்சார விளக்குகளை ஒருக்காலும் விலக்கமாட்டவேமாட்டார்கள். அதுபோல் நிச்சயமாக இனிமேல் யாரும் சிறிய குடும்பவாழ்க்கையைக் கொண்டு, விலாசமான சமூக வாழ்க்கையைப் புறக்கணிக்க மாட்டார்கள். சமதர்மக்கொடிக் கீழ், பெண்மக்கள் வேலை செய்யமாட்டார்களென்றும், குறிப்பிட்டசில வேலைகளைமட்டுமேசெய்வார்ளென்றும் யூகிப்பது, சமதர்மிகளின் வாதத்தையும் அனுஷ்டானத்தையும் தவறாக உணர்ந்து கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

இன்று வேலை செய்யாத பெண்கள் யார்? அவர்கள் சமூகத்திற்குப் பிரயோஜனமற்ற ஒரு சிறு கூட்டத்தார். இத்தகைய புல்லுருவிப் பெண்கள் தங்களுடைய பயனற்ற வாழ்வாலும் சுயநல போகத்தாலும் மலடிகளாய் க்ஷீணதசை யடைகிறார்கள். வேலை செய்யும் பெண்கள் யார்? பிறர் உழைப்பில் வாழாத எல்லாப் பெண்களும். ஆபீஸ்களிலும் கச்சேரிகளிலும், ஸ்டோர்களிலும், பண்டகசாலைகளிலும், பாக்டரிகளிலும், தொழிற்சாலைகளிலும், கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும், சர்வகலாசாலைகளிலும், சமையலறைகளிலும், போஜனசாலைகளிலும், வயல்களிலும், தோட்டம் துரவுகளிலும், சுருங்கச்சொன்னால், தனிவாழ்விலும் பொதுவாழ்விலும் பெண்கள் யாவரும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(தொடரும்)

## ஒரு சந்தோஷ சேதி.

"திராவிடன்"
"திராவிடன்"

சென்னை ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த தமிழ் தினசரி பத்திரிகையாகிய "திராவிடன்" சீக்கிரத்தில் வெளி வரும் என்கின்ற சேதியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் வெளி இடங்களுக்குச் சென்று அது விஷயமாய் சில ஏற்பாடுகள் செய்து வருகிறார். அந்த முறையிலேயே 24-11-34ந் தேதி ஈரோட்டிற்கும் வந்து சென்றார்.

## நாகம்மாள் ஞாபகார்த்த வாசகசாலை, ஈரோடு.

சுயமரியாதை இயக்க ஸ்தாபகர் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியாரும், காலம் சென்றவருமான தோழர் நாகம்மாள் அவர்களின் ஞாபகார்த்தமாக அன்னாரின் பெயரால் ஓர் வாசகசாலை ஈரோட்டில் நிறுவ வேண்டுமென விரும்பும் பல இளைஞர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, ஓர் பொதுக்கூட்டம் நாளது 25-11-34ந் தேதி மாலை 6 மணிக்கு ஈரோடு மண்டபவீதி, 30. நெ.கட்டடத்தில் நடைபெறும்.

அவ்வமயம்! அனைவரும் விஜயம் செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள் என ஈரோடு சுயமரியாதை வாலிபர்கள் எழுதுகிறார்கள்.

## மரணம்.

கோவை சுயமரியாதை இயக்கத் தோழர் பி. எஸ். எம். சங்கரலிங்கம் அவர்களின் சகோதரியார் தோழர் உலகம்மாள் அவர்கள் 13-11-34ந் தேதி மதுரையில் மரணமடைந்தார் என்ற சேதி கேட்டு வருந்துகிறோம்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

1935 ௵ உயர்ந்த சர்க்கார் 1935 ௵

பரீக்ஷை பதவி சம்பளம் பரீக்ஷை

வேண்டுமா?

வருஷக்கணக்கில் படித்து இன்னும்
காலத்தை வீணில் கழிக்க வேண்டாம்!

அன்பையன்ஸ் ஸ்பெஷல் மெட்ரிக் கோர்ஸ்களை தபால் மூலம் வாசித்து சென்னையில் நடக்கும் சர்க்கார் கே. சீனியர் பரீக்ஷை பாஸாகி கலெக்டர் (I. C. S.) லாயர் (L. L. B.) வேலைகளுக்கு இங்கிலாந்திலும், கொளும்பிலும் படிக்கலாம். நமது மாணவர்களின் வெற்றி 1. கே. சீனிவாஸன் (மதுரை) 2. S. சுப்ரமணியம் (திருநெல்வேலி) 3. C. பரமசிவம் (சென்னை) 4. N. நஞ்சப்பா (சேலம்) 5. V. வில்சன் (கோயப்புத்தூர்) 6. S. சாம்பசிவராவ் (கோதாவரி) பீஸ் ஹைஸ்கூலில் 2 வருஷம்படித்தவர்களுக்கு ரூ 100. 5 தடவைகளாக, ஹைஸ்கூலில் 2 வருஷம் படியாதவர்களுக்கு ரூ 200. 10 தடவைகளாக, சொற்ப மாணவர்கள் மட்டும் எடுக்கப்படுவதால் விபரத்திற்கு உடன் ஸ்டாம்பு அனுப்பவும்.

அன்பையன்ஸ் காலேஜ்,
ஆறுமுகநேரி S.I.R.

# துருக்கி பெண்கள் முன்னேற்றம்.

## ஹைக்கோர்ட்டில் பெண் ஜட்ஜுகள்.

### அமீருடன் அபிப்பிராயம்.

தென் கன்னடம் ஜில்லா ஜட்ஜு மீர் அமீருடீன் மனைவி பீகம் சுல்தானு அமீருடீன் தன் கணவருடன் மேனாடுகளில் எல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு, சமீபத்தில் தான் சென்னைக்குத் திரும்பினர். துருக்கியில் பெண்களின் முன்னேற்றத்தைப்பற்றி அவர் தெரிவித்ததாவது:—

"துருக்கியில் பெண்கள்மிகவும் முன்னேற்ற மடைந்திருக்கின்றனர். பர்தாமுறை அங்கு கிடையாது. ஆண்களும், பெண்களும் கல்லூரிகளில் ஒன்றுய்ப் படிக்கிறார்கள். எல்லாத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் வேலை செய்து வருகின்றனர்.

இஸ்தான்புல்லில் உள்ள ஹைகோர்ட்டில் நான்கு பெண் நீதிபதிகள் இருக்கிறார்கள். ஒரு கோர்ட்டில் இரண்டு ஆண் நீதிபதிகளுடன் உட்கார்ந்துகொண்டு ஒரு பெண் நீதிபதி வழக்கை விசாரித்துக்கொண்டிருந்தார். கோர்டில் தீர்ப்புக் கூறுவதை ஒரு பெண் குமாஸ்தா பகிரங்கமாக 'டைப்' அடித்துக்கொண்டிருந்தார்.

இஸ்தான்புல்லில் உள்ளமாடல் பாடசாலையைப் போன்ற ஸ்தானம் வேறெங்குமில்லை.

மேனாட்டு நாகரீக முறைகள் அப்படியே பின்பற்ற வேண்டியதில்லை. மேனாட்டு லோகாயதமும், கீழ்நாட்டு தேவாயதமும் ஒன்றுபட வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன்.

(தினமணி)

# அநுதாபம்.

தோழர் ஜே. என். ராமநாதன் அவர்கள் சென்ற இரண்டாம் வாரம் இறந்ததற்கு மிகவும் வருந்துகிறேன். அவர் ஓர் பெரிய பிரச்சாரகராகவும், புத்தி கூர்மையுள்ளவராகவும் இருந்தார். அப்பேர்ப்பட்ட அவரை நாம் பிரிந்தது வருந்தத்தக்கதேயாகும். என்னுடைய அநுதாபத்தை அவர்கள் குடும்பத்தார்க்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்து கொள்ளுகின்றேன் என சென்னை பி. சத்தியமூர்த்தி எழுதுகிறார்.

# திருவாங்கூரில் தீண்டாமை விலக்கு

## ஸ்ரீ மூலம் சபையில் மசோதா.

திருவாங்கூர் ஸ்ரீ மூலம் சபையில் தேசியக் கட்சித்தலைவர் தோழர் கே. பரமேஸ்வரம் பிள்ளை தீண்டாமை விலக்கு மசோதா ஒன்றைக் கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார்.

ஹிந்துக்களில் தாழ்ந்தவகுப்பினர் எனச் சொல்லப்படும் ஒரு ஜாதியினருக்கு சில விஷயங்களில் அசவுகரியங்கள் ஏற்படுத்தப்பட்டு அவை சட்டப்படியும் அங்கீகரிக்கப்படுவதால் விசேஷகஷ்டம்நேருவதாகவும் அவ்வித பழக்கவழக்கங்கள் இக்கால சமூக முறைக்கு ஏற்றனவாகவில்லையென்றும் ஆகவே சட்டப்படி அவற்றை அங்கீகரிக்கக்கூடாதென்றும், அம்மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. சமஸ்தான பிரஜைகளில் ஒருவர் தீண்டாத வகுப்பினர் என்பதற்காக அவர் விஷயத்தில் வித்தியாசம் பாராட்டக்கூடாதென்றும், தீண்டாமை வழக்கத்தை ஸிவில் கோர்ட்டோ கிரிமினல் கோர்ட்டோ அங்கீகரிக்ககூடாதென்றும்அம்மசோதாவில் குறிப்பிட்டிருக்கிறது. 'தீண்டல்' என்ற வழக்கம் திருவாங்கூரில் இப்போது அனுஷ்டானத்திலிருப்பதால் இந்த முறையில் அடங்கியஜாதியார்களனைவரையும் பொறுத்து இம்மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. தாழ்ந்த வகுப்பினருக்கு அசவுகரியங்களை ஏற்படுத்துவது சரியல்ல வென்றஉணர்ச்சி இப்போது இந்த சமஸ்தானத்தில் அதிகமாக விருக்கிறது. கவர்ன்மெண்டார் நியமித்த ஆலயப் பிரவேச விசாரணைக் கமிட்டி சமர்ப்பித்த ரிபோர்ட்டிலும் இது விஷயமாகசிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. தீண்டல்-என்ற வழக்கத்தை ஒழிக்க தகுதியான சட்டமியற்றவேண்டுமெனஅந்த ரிபோர்ட்டில்சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள ஒரு உணர்ச்சியை விளக்க ஒரு மசோதா இயற்றுவது பொருத்தமாகும். பொதுஜன அபிப்பிராயம் எவ்வளவு தடித்திருந்தாலும் தாழ்ந்தவகுப்பினரின் நியாயமான உரிமைகளை பாதிக்கக்கூடியபடி பழக்க வழக்கங்கள் சில இன்னமும் இருந்து வருகின்றன. ஆகவேகவர்ன்மெண்டார் இப்போது தீண்டாமைக்குச்சட்டப்படி அளித்துவரும் ஆதரவை நிறுத்திக்கொள்ள வேண்டும். அப்படிச்செய்தால் ஹிந்து சீர்திருத்தக்காரார்களின் வேலை பூர்த்தியாவதோடு தீண்டாமை என்பதும் நசித்துப் போகும். என தோழர் பிள்ளை குறிப்பிட்டிருக்கிறார்,

—பு-பி. சு. மி.

# விவாக ரத்து உரிமை

## "பெண்களுக்கு அளிக்க வேண்டும்"

### தோழர் துர்க்காபாய் பேச்சு.

ஆந்திர தேச பெண்கள் மகாநாடு 18-11-34ந் தேதி மாலை மதனபள்ளி பெசன்ட் மண்டபத்தில் ஆரம்பமாயிற்று. ஆதி ஹிந்து பெண்களின் பிரதிநிதிகளுள்ளிட்டு சுமார் 500 பெண்மணிகள் பிரசன்னமாயிருந்தனர். தோழர் ஜி. துர்க்காபாய் மகாநாட்டிற்கு தலைமை வகித்துப் பேசியதாவது:—

புருஷன் அதிக கொடுமைப் படுத்துவதாக கோர்ட்டார் உணரும்படி ருஜுப்பித்தால், மனைவி விவாக ரத்து செய்து கொள்ள உரிமை பெறும்படி ஓர் சட்டம் செய்ய வேண்டும். இப்பொழுதுள்ள சட்டப்படி, ஒரு ஹிந்துப் பெண், புருஷனிருக்கையில் எக்காரணத்தைக்கொண்டும் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கவில்லை. புருஷன் சதா கொடுமைப் படுத்தி வந்தால், அத்துர திருஷ்ட வசமான பெண்ணுக்கு மற்றோர் விவாகம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையை உபயோககரமாக நடத்த சௌகரியமளிக்க வேண்டியது மிக சாதாரணமான நியாயமாகுமென்பது எனது கருத்து.

சாரதா சட்டத்தைப் பற்றி ஒரு வார்த்தை. 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு செய்யும் விவாகமானது சட்டப்படி செல்லாது என்று சட்டம் செய்து விட்டால், இப்பொழுது சாரதா சட்டத்திலுள்ள பல குறைபாடுகளையும் நிவர்த்தித்து விடலாம். மேலும் சனதனிகளும் கூட அந்த யோசனையை ஆதரிப்பார்கள்.

இந்தியாவிலே கோடிக்கணக்கான ஜனங்கள் எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கிறார்கள். இவ்வித நிலைமையை சீர்திருத்த வேண்டிய முக்கிய கடமை சர்க்காரையே சார்ந்ததாகும். இதற்கெல்லாம் மூலகாரணம், பொருளாதார விஷயமாக, இந்தியா, பிரிட்டனுடன் பிணைக்கப்பட்டுஅதன் ஆதிக்கத்தில் இருப்பதேயாகும். ஏழை கிராமவாசிகளுக்கு ஒரு வேளை சாப்பாடு கூட கிடைப்பதில்லை. இந்தியர் நன்மைக்கு பாதகமாகவும், பிரிட்டிஷாருக்கு லாபகரமாகவும் ஒவ்வொரு பொருளாதார சட்டத்தை நிறைவேற்றுவதன்றி, அவ்வித நிதி கொள்கையையும்அனுஷ்டிக்கிறார்கள்.

ஹிந்து குடும்பங்களிலே, விதவைகளின் நிலைமை மிகவும் பரிதாபகரமாகும். ஆண்களைப் போல பெண்களுக்கும் சமத்வமான வார்சு பாத்தியத்தை சட்ட பூர்வமாகச்செய்ய வேண்டியது அவசியம். தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் பெண்கள் சிரத்தை காட்ட வேண்டும்.

அடிமை விலங்குகளை தகர்த்தெறிந்தாலே தேசத்திற்கு பல விதங்களிலும் கதிமோட்சமேற்பட வகையுண்டு. அந்நிய அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் எந்த தேசமும், பொருளாதார, சமூக அபிவிருத்தியடைந்ததில்லை. நாம் ஒற்றுமையாகவும், கட்டுப் பாடாகவுமிருந்து, தேச சமூக, முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டும் எனப்பேசினர்.

பிறகு மகாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகளுள் முக்கியமானவை.

1. ஆண் பெண் குழந்தைகளுக்கு ஒன்றுக கட்டாய ஆரம்பக்கல்வியளிக்கப்படவேண்டும்.
2. ஆந்திர தேசத்தில் பெண்களுக்கென தனிக்கலாசாலையொன்றை ஸ்தாபிக்கவேண்டும்.
3. எல்லா கலாசாலைகளிலும் பெண்களுக்குத் தனி ஹாஸ்டல் வசதிகள் வேண்டும்.
4. ஆந்திர ஸர்வகலாசாலை அங்கத்தினர் தேர்தலில் நின்ற ஒரே பெண் அபேக்ஷகரைத் தெரிந்தெடுக்காததற்காக மகாநாடு வருந்துகிறது.
5. ஹிந்து விவாகரத்து மசோதாவை ஆதரிக்கும் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.
6. நாடெங்கும் சர்க்கார் கர்ப்பத்தடை ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தவேண்டும்.
7. பெண்களுக்கு எல்லாத்துறைகளிலும் சம உரிமையும் சம அந்தஸ்தும் அளிக்கவேண்டும்.

# சுயமரியாதைத் திருமணம்.

பெங்களூர் 'பகுத்தறிவு' சங்கத்தின் ஆதரவில் தோழர் கே. எம். முனிசாமி அவர்களுக்கும், தோழர் முனியம்மாள் அவர்களுக்கும் 18-11-34 காலை 10 மணிக்கு தோழர் பி. எம். கிருஷ்ணசாமி தலைமையில் சுயமரியாதை முறைப்படி மணமகன் மணமகள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. பின்னர் தோழர்கள்; எம். பொன்னுசாமி, இ. கிருஷ்ணசாமி, இ. எஸ். மணியர், எம். எஸ். சுந்தரவர்கள் முறையே, "மணவாளன்—மணவாட்டிகள் நடக்கவேண்டிய முறை", "சீர்திருத்தம்" "சுயமரியாதைத்திருமணம்" "மூடபழக்க வழக்கங்கள்" என்பதை பற்றிச்சொற்பொழிவாற்றிய பின்னர் தோழர் பார்த்தசாரதியால் வாழ்த்துப் பாடப்பட்டு தலைவர் முடிவுரையுடன் திருமணம் முடிந்தது.

டைப்ரைட்டிங் மிஷினைப்போன்று தந்தியடிக்கும் இயந்திரம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதில் பழகுபவர்கள் 6 மாத காலத்தில் மணிக்கு 80 தந்திகள் வீதம் அனுப்பக்கற்றுக் கொண்டுவிடலாம். (வீ. கே.)

## கொச்சி முனிசிபல் பெண்சேர்மனுக்குப் பாராட்டு.

### திருச்சி நீலாவதிவாழ்த்து.

கொச்சி முனிசிபாலிட்டிக்கு சேர்மனாகத்தேர்ந்தெடுத்திருக்கும் தோழர் பர்னுடு அம்மையாருக்கு திருச்சி தோழர் நீலாவதி அம்மையார் கீழ்க்கண்ட வாழ்த்துச்செய்தியை அனுப்பி யிருக்கிறார்.

"தாங்கள் கொச்சி முனிசிபாலிட்டிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முழுமனதுடன் தங்களை வாழ்த்துகிறேன். இந்தியா முழுவதற்கும் தாங்களே முதல் முதல் முனிசிபல் சேர்மனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டமுதல் பெண்மணி என்பதை மகிழ்ச்சியுடன் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். தங்களுடைய நிர்வாக காலத்தில் பெண்கள் பொது வாழ்வில் வெற்றி பெறவும், அவர்கள் பல துறைகளிலும், சிறப்பாக கல்வியிலும் முன்னேற்ற மடையத்தக்க காரியங்களை செய்வீர்களென்று நம்புகிறேன்."

## ஈரோடு முனிசிபாலிட்டி.

### பொதுஜனங்களுக்கு அறிவிப்பு.

இந்தமுனிசிபாலிட்டியார், சிசுபரிபாலன விடுதிக்காகவும், மருத்துவ வேலைகளை கவனிப்பதற்காகவும் ஒரு லேடி டாக்டரை நியமித்திருக்கும் விஷயம் இதன் மூலம் பொது ஜனங்களுக்கு அறிவிக்கப்படுகிறது. முனிசிபல் சிசுபரிபாலன விடுதி இப்போது வள்ளுவர் புது வீதியில் அமைக்கப்பட்டிருக்கிறது. முனிசிபாலிட்டியார் ஒரு லேடி டாக்டரை நியமித்ததின் பிரதம நோக்கம் இந்நகர் ஏழைமக்களின் பிரசவங்களை இலவசமாக கவனிப்பதற்கும், இன்னும் மருந்துமுதலிய வசதிகளை அளிப்பதற்கும் ஆகும். இந்த லேடி டாக்டர் ஏழை மக்கள் பிரசவங்களை கவனிப்பதுடன், பிரசவகாலத்திற்கு முன்னும், பின்னும்ஏற்படக்கூடிய கர்ப்ப சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் சாஸ்திர முறையில் சிகிச்சை செய்வார். டாக்டர் அம்மையார் பிரதி தினமும் காலை 8மணிமுதல் 10-30 மணிவரையிலும், மாலை 3மணி முதல் 5மணி வரையிலும் சிசுபரிபாலன விடுதியில் இருப்பார். ஷையாரது சேவைகளைப் பொது ஜனங்கள்பயன் படுத்திக்கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

T. புருஷோத்தம்,
கமிஷனர்.

## சர். ஷண்முகத்தின் தோல்விக்குக் காரணம்.

ராஜபாளையம் வர்த்தகர்தொகுதியின்வாக்காளர்கள் மூன்றுபேர் மட்டும் இருக்கின்றார்கள். இதன் சம்மந்தமான ஓட்டுகளை வாக்காளர்களிடமிருந்து சர். ஷண்முகத்திற்கு ஆதரவாக பெருவதற்கு தோழர் பண்ணையார் ராமச்சந்திர பிள்ளையவர்கள் பெரும் முயற்சியெடுத்தார்கள். ஆகவே இரண்டு ஓட்டர்கள் சர். ஷண்முகத்திற்கே ஓட்டு போடுவதாக சொன்னதின் பேரில் அவர்களுக்கு வரும் பேலட் பேப்பரை எதிர் பார்த்திருந்தார்கள். நமது வாக்காளர்களில் ஒருவராகிய சத்திரப்பட்டி உப்புக்கடைத் தோழர்ராமசாமி மூப்பனார் அவர்களுக்கு வந்த பேலட் பேப்பரை இவ்வூர் தபாலாபீசில் வந்து பெற்றுக்கொள்ள தாமே நேரில் வந்து வாங்கி அதை தோழர் பண்ணையார் அவர்களிடம் கொண்டுபோகும்போது இவ்வூர் காங்கிரஸ் தொண்டர் வெகுவேகமாக ஓடிவந்து ஷையாரிடமிருந்த பேப்பரை அபகரித்துக்கொண்டு ஓடிவிட்டார். பின்பு அந்த பேப்பரை என்ன செய்தார்கள் என்று தெரியவராது. மறுநாள் தோழர் பண்ணையார் அவர்கள் கலக்டரிடம் மனுக்கொடுத்து பிரிதொரு பேலட் பேப்பர் வரவழைத்து தோழர் மூப்பனார் அவர்களிடம் சர். ஷண்முகத்திற்கு ஆதரவாக ஓட்டுப்பெற்று அனுப்பினார். தனது பேப்பரை அபகரித்துப்போன தொண்டர் பேலட் பேப்பரை தம் கட்சியின் சார்பாக உபயோகித்திருக்கலாமென்று தெரிய வருகிறது. இம்மாதிரியே அநேக இடங்களிலும் நடந்திருக்கிறதென்றும் தெரிய வருகிறது.

## திருக்கோஷ்டியூர் சாரதா வாசகசாலை திறப்பு விழா.

திருக்கோஷ்டியூர் வாசகசாலை திறப்பு விழா 16-11-34ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. இவ்விழாவிற்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்து ஆண்களும், பெண்களும் பெருந்திரளாக வந்திருந்தார்கள்.

தோழர் டாக்டர் நா. நமசிவாயம் அவர்கள் இல்லத்திலிருந்து தலைவர்களை மேளவாத்தியங்களுடன் வரவேற்று மலர் மாலையிட்டு ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

இவ்வாசகசாலையின் நோக்கத்தை விளக்கிக் கூறி தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களை தலைமை வகித்து நடத்திக் கொடுக்குமாறு அ. பொன்னம்பலம் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

தலைவர் சமூக முன்னேற்றம், வாசகசாலையின் பயன் என்பது பற்றி முன்னுரையாகப் பேசினார்.

அதன் பிறகு புதுக்கோட்டை தோழர் கே. முத்துச்சாமி வல்லத்தரசு பி. ஏ., பி. எல்., அவர்கள் வாசகசாலையின் அவசியத்தையும், மக்கள் முன்னேற்றத்தையும் வலியுறுத்திக் கூறி வாசகசாலையைத் திறந்து வைத்தார்.

தோழர்கள் சி. முருகன், சிவசுப்பிரமணியம், அ. பொன்னம்பலம், கா. பள்ளிகொண்டான், வாசு. வை. சு. சண்முகம் ஆகியவர்கள் நமது கடமை, வாலிபர் முயற்சி, பகுத்தறிவு, மூட நம்பிக்கை, சமூக சீர்திருத்தம், என்பன பற்றி பேசினார்கள்.

தலைவர் உருக்கமாகவும் விரிவாகவும் முடிவுரை கூறினார். தோழர் தே. சொக்கலிங்கம் அவர்கள் நன்றி கூறினார். மாலை 5-30 மணிககு விழா இனிது முடிவடைந்தது. வெளியூர் தோழர்கட்கு மத்தியான உணவு வழங்கப்பட்டது. இவ்விழாவிற்குப்பெரிதும் உதவியாக தோழர்கள் மு. கா. ரெங்கனாதன், கா. மு. காளிமுத்து, கா. நமசிவாயம் ஆகியவர்கள் முன்னின்று வேண்டிய வேலைகள் செய்தது பெரிதும் பாராட்டத்தக்கதாகும் எனக்காரியதரிசி எழுதுகிறார்.

## ரோமன் கத்தோலிக்கில் இருந்து மத மாற்றம்.

மகாவந்திக்கத்தக்க கும்பகோணம் மேற்றாணியார் அவர்களுக்கு. ஷை பங்கை சேர்ந்த வலையப்பேட்டை மாங்குடி கிராமத்தில் இருக்கும் ச. அந்தோணிமுத்து குமாரர் அ. ஞானபிரகாசம் தெரிவித்துகொள்வது. நான் 1-11-34ந் தேதி தங்களுக்கு எழுதிய லெட்டர்க்கு யாதொரு பதிலும் இல்லாததின் பொருட்டு நான் மறுமுறையும் தங்கள் ரோமன் கத்தோலிக்மதத்தை விட்டு மனபூர்த்தியாய் 1-11-34 முதற்கொண்டு விலகிக்கொண்டேன் என்று இதன் மூலியமாய் அறிவித்துக் கொள்கிறேன் என எ. ஞானப்பிரகாசம் எழுதுகிறார்.

## பாரிசாதம் இளம்பரிமணம் வருகை.

கோலாலம்பூர், செந்தூல இந்திய சுயமரியாதை சங்கத்தின் போஷகர் தோழர் மா. செ. பரிமணம் அவர்கள் காதலி பாரிசாதம்அவர்களும், இளம் பரிமணம் ஐந்து வயதுள்ள குமாரனும் வரலானார்கள். தாயகம் செம்பொன் மாரியிலிருந்து கோலாலம்பூருக்கு 28-10-1934ல் சுகமே தாயும் சேயும் வந்து சேர்ந்தார்கள். அவ்வமயம் தோழர்கள் மா. செ. பரிமணம் சி. எஸ். குமாரசாமி, மணிவாசகம், ராமசாமிஆகியசுயமரியாதை தோழர்கள் ரெயில் நிலையத்திற்குச் சென்று அழைத்து வரலானார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## ஜலகண்டபுரம்.

### பஞ்சாயத்து போர்டு சேர்மன் தேர்தல்.

### தோழர் ராஜகோபால் வெற்றி.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் தேர்தல் 12-11-34ந்தேதி மாலை ஒரு மணிக்கு தோழர் வி. எஸ். கே. ராமசாமி செட்டியாரின் தலைமையின் கீழ் நடைபெற்றது. எல்லா அங்கத்தினர்களாலும் ராஜவிசுவாசப்பிரமாணம் செய்யப்பட்டது.

தோழர் எஸ் ராஜகோபால் அவர்கள் சேர்மனாகப்போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். சேலம் தோழர் பி. எஸ். விஸ்வநாத செட்டியார் பேங்கர், அவர்களால் சேர்மனுக்கு ரோஜாமாலை சூட்டப்பட்டது. பிறகு தோழர் ராஜகோபால் எல்லோருக்கும் வந்தனத்தைச்செலுத்தி தன்னை பெரிய பதவிக்கு, நகர பெரு மக்கள் அனைவரும் ஒருமனப்பட்டு தலைமை ஸ்தானம் கொடுத்ததற்காக மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன் என்று சொல்லிமுடித்தார்.

பிறகு எல்லோரும் சேர்மன் வீட்டிற்கு ஊர்வலத்துடன் சென்றனர். தலைவர் எல்லோருக்கும் சந்தனம் தாம்பூலம் வழங்கினார். பிறகு 2மணிக்கு வி. எஸ். கே. ராமசாமி செட்டியார் உதவி சேர்மனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டார் என நமது நிருபர் எழுதுகிறார்.

## பகுத்தறிவாலயமும், வாசகசாலையும்.

இவ்வாலயத்தின் திறப்பு விழா சென்ற 11-11-34ந் தேதி மாலை 6 மணிக்கு சென்னை தங்கசாலை தெரு, 297-ம் நெ. கட்டிடத்தில் தோழர் தருமதீரர் தலைமையில் தோழர் ஓ. இரத்தினவேலு அவர்களால் திறக்கப்பட்டது. சுமார் 60 தோழர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தனர். அவ்வமயம் பகுத்தறிவாலயங்களின் அவசியத்தைப் பற்றி (லண்டன் நகரத்து பகுத்தறிவாலயத்தின் சென்னை கிளை சங்கத்தின் காரியதரிசியாகிய) தோழர் ஓ. இரத்தினவேலு அவர்கள் நீண்டதோர் சொற்பொழிவு ஆங்கிலத்தில் நிகழ்த்தினார்.

தோழர்கள் வி. ஆர். தாமோதரம், எஸ். இரங்கநாதம், டி. இராதாகிருஷ்ணன், கே. எஸ். நாதன் முதலியவர்கள் அதை பின் பற்றி பேசினார்கள்.

பிறகு தோழர் சச்சிதானந்தத்தால் பகுத்தறிவுக் கீதங்கள் பாடப்பட்டு தலைவர்முடிவுரையுடன்ஷை ஆலயத்தின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 8 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசி தெரிவிக்கிறார்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லோ அல்லது, டோக்கியோவிலோ இன்று ஒரு மனிதன் என்ன செய்கிறான் என்பதை நாளை காலை மெம்பிஸ் அல்லது லீமா தெரிந்து கொள்ளுகிறது. மனிதர்கள் எளிதில் போக முடியாத திபெத் நகரத்திலுள்ள சந்நியாசிகளும் விஷயங்களைக் கேட்டு பரபரப் படைகிறார்கள். கன்னியாமடத்தில் கன்னிகளும் மனமாற்றமடைகிறார்கள். கத்தோலிக்கப் பாதிரிகளில் பெரும் பகுதியினர் தங்கள் பிரமச்சரியத்தை ஒழித்து விடுவதற்கு ரோம் நகரத்திற்கு மனுப்போடுகிறார்கள்.

இவைகளிலெல்லாம் அழகான அபிப்பிராயமும், உரிமையின் உறுதியும் காட்டப்படுகின்றன. தற்கால நாகரீகத்தில் இருப்பதுபோல சமுதாய உண்மைகள் உலகத்தில் முன் எக் காலத்திலும் மலிந்து இருந்தது கிடையாது. நாம் நடத்தையில் க்ஷீணமடைந்து வருகிறோம் என்று சொல்லுகிறவர்களுக்கு அது தான் நல்ல பதிலாகும். நமது உலகம், சேவகம், உதவி என்ற கூச்சல் நிறைந்ததாயிருக்கிறது. நமது காலத்திய சமுதாயம், பரோபகாரம், கல்வி முதலியவைகளின் மானிட இயக்கங்களைப்பற்றிய ஜாப்தாவே இப் புத்தகத்தின் ஒரு அத்தியாயத்தை நிறைத்து விடும். அவையாவும் புதியவை. மதப் பிரசாரகர்கள் இக் காலத்தை "நமது லோகாயுதகாலம்" என்கின்றனர், நமது இயக்கங்கள் அவர்களுக்குப் புதிதாக இருக்கின்றன. சமாதானத்திற்கும், சகோதரத்வத்திற்கும், நியாயத்திற்கும், ஏழைத் தொழிலாளர்களுக்கும், நோயாளிகளுக்கும், உதவியற்றவர்களுக்கும், அங்கஹீனர்களுக்கும், குழந்தைகளுக்கும், கல்விக்கும், மதுவிலக்குக்கும், குற்றம், கொடுமை முதலியவைகளை அடக்குவதற்கும், நன்கொடைகளுக்கும், ஏழைக்குழந்தைகளின் ரஜாவுக்கும் இன்னும் பழைய கெட்ட காலத்திலிருந்து நம்முன் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆயிரம் துரதிர்ஷ்டங்களுக்கும் உலகம் இக் காலத்தைப் போலவேறு எக் காலத்திலும் அக்கறை பாராட்டி யிருந்ததில்லை.

இப் புதிய மனோபாவம் மதத்தைப் பாதித்து நிற்கிறது. சாஸ்வத துன்பம் என்ற நம்பிக்கை கிறிஸ்து மதத்தின் மிக விளக்கமான கொள்கைகளில் ஒன்று. அக் கொள்கையை பாதிக்கு மேற்பட்ட கிறிஸ்தவ உலகத்திலிருந்து அப் புதிய மனோபாவமே வற்புறுத்தி அப்புறப்படுத்தியது. விஞ்ஞான சாஸ்திரம் அப்படிச் செய்யவில்லை. அப் புதிய மனோபாவமே மக்களின் மூர்க்கிய சாபத்தைப் பற்றியும், கிறிஸ்துவின் சமாதான மரணத்தைப் பற்றியும் நம்ப மறுத்தது. விஞ்ஞான சாஸ்திரம் அப்படிச் செய்யவில்லை. அப் புதிய மனோபாவமே இரத்தப் பலிகளையும், நரகங்களையும் வெறுக்கிறது. அப் புதிய மனோபாவமே வணக்கஞ் செய்ய மறுக்கிறது. ஏனென்றால் வணக்கம் என்பது கீழ் நாட்டுச் சுல்தான்கள், லார்கள் முதலிய அரசர்களின் முகஸ்துதிகளாகும் என்பதால்.

மனிதனுடைய மூளையைப்போலவே மனிதனுடைய மனமும் பரம்பரை மதங்களுக்கு விரோதமாகப் புரட்சி செய்கிறது. பள்ளிக்கூடங்களிலிருந்து பரிணாம சாஸ்திரத்தை விலக்கிவிட்டு கடவுளிடத்தில் அவநம்பிக்கை யென்னும் பெருக்கைத் தடுக்க நினைத்தல், தொத்து வியாதியைத் தடுக்க அதுபற்றிய அறையில் காடியையும் வாசனைச் செடிகளையும் தெளிக்கும் பழைய கால வழக்கத்தைப்போலவே இருக்கிறது.

இது முழுவதும் ஒரு புதிய சகாப்தம். ஒரு புரட்சிக்காலம். புதிய எண்ணங்களுக்கும் பழைய காலத்துப் பாரம் பரியங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் போராட்டம் முடிவுக்கு வந்து தீரவேண்டும். அதைத் தடுக்க முடியாது. அதை நிறுத்திவைக்கவும் முடியாது. ஏதன்ஸ், ரோம் இவைகளின் நாகரீகம் அழிந்த காலத்தில் நிலைமை இப்படியே இருந்தது. இன்றைய தினத்தில் அதே கொள்கைகளையும், அதே கேள்விகளையும், அதே புரட்சிகளையும் உடைய நாகரீகங்கள் 40 இருக்கின்றன. இருபது அழிந்தால் மற்றொரு இருபது வேலையை நடத்திச் செல்லும். அதன் முடிவு என்னவாகும்? அம் முடிவைச் சொல்ல இச் சிறு புத்தகத்தைப்போல 50 புஸ்தகங்கள் வேண்டும். ஆனால் இப் புத்தகத்தின் மீதி அத்தியாயங்களில் அவைகளைப்பற்றிச் சிறு குறிப்புகள் தோன்றும். நமது புரட்சியின் சரித்திரப் பூர்வமான காரணங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அக்காரணங்கள் தற்கால பூமியில் ஆழமாய்ச் சென்றிருக்கின்றன.

## எதிர்ப்புகளின் மூலகாரணம்.

### 3-ம் அத்தியாயம்.

வால்டேர் எதிர்ப்புகளை யெல்லாம் ஆரம்பித்தார் என்று பொறுமை யில்லாமல் யாரும் கூறலாம். தற்கால நாஸ்திகக் கொள்கையை ஸ்தாபிப்பதற்கு அந்தப் பேரறிஞரான ஆசிரியன் எடுத்துக்கொண்ட பங்கைப்பற்றி மிகைபடக்கூறுதல் நிச்சயமாகவே கஷ்டம். ஆனால் சரித்திரம் அவ்விதம் சொல்லுவதாயில்லை. இயக்கங்கள் எந்த ஜுபிடர் தெய்வத்தின் மூளையிலிருந்தும் தக்க முஸ்தீபுகளுடன் நடைபெறவில்லை.

நாஸ்திகம் மத்தியகால சரித்திரத்தில் மிகத்தள்ளிப்போகிறது. மத்திய காலத்தில் பிரக்யாதி பெற்றிருந்த டாண்ட்டி என்னும் கவிஞர் தன் காலத்தில் ப்ளோரன்ஸ் என்னுமிடத்தில் வெகுவாய்ப் பகுத்தறிவையே தழுவிச்சென்ற வகுப்பைச்சேர்ந்த ஒரு பெரிய நாஸ்திகக்கூட்டம் இருந்ததாகக் கூறுகிறார். ஆனால் அக்காலம் நாஸ்திகர்களுக்குமிகவும் அபாயகரமானதாக இருந்திருக்கிறது. ஐரோப்பா முழுவதும் உள்ள மார்க்கெட்டுகளில் தீப்பட்டெரியும் மனித குடலின் மாமிசத்தின் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. முதலில் போப்பின் அதிகாரத்தை விலக்கவேண்டியது அவசியமாக இருந்தது.

நவீன நாஸ்திகம் பிறந்ததற்கு ஒரு தேதி குறிப்பிட வேண்டும். அது பிறந்தது 1677 ஆம் வருஷத்தில் என்று சொல்லலாம். அது பிறந்த விடம் இங்கிலாந்து. உலகத்திலுள்ள எல்லா தேசங்களையும்விட்டு ஏன் இங்கிலாந்தை மட்டும் குறிப்பிட வேண்டுமென்று யாரும் கேட்கலாம். நாஸ்திகக்கிருமிகள் வெளிநாடுகளிலிருந்துஇங்கிலாந்திற்குத்தான் வந்தன வென நான் சொல்லுவேன். இத்தாலியஆசிரியர்களானபொக்காக்கியோ பிட்டார்க் ஆகியவர்களும் பிரஞ்சு ஆசிரியாகளான மாண்ட்டனி, பெயில் ஆகியவர்களும் நாஸ்திகத்தின் பெற்றோர்கள் என்று சொல்லத்தகும். வானசாஸ்திரம் முன்னேற்றமடைந்தும் மேல் இந்தியாவும், கீழ் இந்தியாவும்கண்டுபிடிக்கப்பட்டதும், அச்சயந்திரம் உண்டாக்கப்பட்டதும், தர்க்கத்திற்கும், நாஸ்திகத்திற்கும் இடமுண்டாயிற்று. ஆனால் பிரான்ஸிலும் இத்தாலியிலும் ரோமன் கோவில் இன்னும் சர்வ சக்தி கொண்டதாக இருந்தது. கயர்டானோ ப்ரூனோ என்னும் பெரியார் உலகத்தின் மிக உயர்ந்த தத்வஞானத்தைப்பற்றி போதித்ததற்காக 1600 ஆவது வருஷத்தில் உயிருடன் நெருப்பிட்டு எரிக்கப்பட்டார்.

இங்கிலாந்தில் இத்தகைய விவகாரம் ஒன்று மில்லாமல் இருந்தது. செர்பூரி லார்டு ஹெர்பர்ட் பாரிஸ் நகரத்தில் இங்கிலாந்தின் ராஜ தூதராய் இருந்து வந்தார். அவர் இங்கிலாந்து திரும்பும்போது தன்னுடன் புதிய நாஸ்திகக்கிருமிகளையும்கொண்டுபோனர்.

இங்கிலாந்தும் பகுத்தறிவு விஷயத்தில் முழுதும் குற்றமற்றதாயிருந்ததில்லை. ஷேக்ஸ்பியர் காலத்திருந்த சில மேதாவிகள் பகுத்தறிவுக் கொள்கை பற்றியவர்கள்என்பது நன்றாய்த்தெரிந்த விஷயம். ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களைக்கவனமாய்ச் சோதித்துப் பார்த்தால், அப் பெரிய கவிஞனே ஒரு பகுத்தறிவுக் கொள்கைக்காரன் என்பது நன்கு விளங்கும். பதினேழாவது நூற்றாண்டின் நடுவில் மதவாதிகள் ஒருவரை ஒருவர் தூஷித்து வந்ததில் சலிப்படைந்து மதத்தைப்பற்றித் தாராளமாய் எழுத ஆரம்பித்தார்கள்.

லார்டு பேக்கன், சர்ஐசாக் நியூட்டன் ஆகியவர்களைப் பின் பற்றியவர்களுடைய உதவி இருந்தும், அக்காலத்தில் வான சாஸ்திரத்தைத் தவிர்த்து, மதிப்பிற்குரிய விஞ்ஞான சாஸ்திரம் ஒன்றும் இருந்ததில்லை. ஆனால் நாஸ்திகத்தின் முதல் பகுதி இரண்டு காரணங்களால் ஏற்பட்டது. கிரேக்க, ரோமன் இலக்கியமும், அவர்களுடைய ஒழுக்கமும், ப்ராட்டெஸ்டண்டு கிறிஸ்தவர்கள் எல்லாரையும் படிக்கச்சொல்லி வற்புறுத்தி வந்த பைபிள் படிப்பும் நாஸ்திகத்திற்கு அடிமையாயின. உலகத்திற்கு பைபிளைக்கொடுத்து ப்ராட்டெஸ்டண்டு மதம் நாஸ்திகத்தை உண்டாக்கிற்று என்று கத்தோலிக்கர்கள் கைகூறுவது நியாயமானதேயாகும். இக்காலத்தில், பாதிரிகளைத் தவிர எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள் அநேகர் இருந்தனர். அவர்கள் "நாங்கள் உங்களுடைய பைபிளையே படிப்போம். அது மிக நன்றாக இருக்கிறது" என்றார்கள். முடிவு நாசகரமானதாயிற்று.

நான் 1677ம் வருஷத்தை ஒரு தேதியாகச் சொன்னேன். ஏனென்றால் அந்த வருஷத்தில் முதல் முதலாக ஸ்டெல்லிங்ப்ளீட் என்னும் ஒரு ஆங்கிலப்பாதிரி நாஸ்திகத்தை எதிர்த்து ஒரு வைதீகப் பதில் எழுதிவெளியிட்டார். பதினேழாவது நூற்றாண்டின் மத்தியிலிருந்து பதினெட்டாவது நூற்றாண்டு மத்திவரையில் இங்கிலாந்தில் அநேக பிரக்யாதி பெற்றஅறிஞர்கள்நாஸ்திக நூல்களின் ஆசிரியர்களாய் விளங்கினர். ஹெர்பெர்ட், ப்ளௌண்ட், டிண்டல், டோலண்டு, லார்டு ஷாப்டஸ்பரி, போலிங்புரோக், காலின்ஸ் இன்னும் அநேகர் பிரபல நாஸ்திக ஆசிரியர்கள். பூரிட்டென்ஸ் என்பவரின் கொடுமை மிகுந்த மத ஆதிக்கம் ஒழிந்தது அல்லது அது அமெரிக்காவுக்குச் சென்று விட்டது. தேசத்தில் மறுபடியும் சந்தோஷமும் சுதந்தரமும் தோன்றலாயின. இங்கிலாந்தில் மத ஸ்தாபனங்கள் தளர்ச்சியடைந்து பெரிதும் கெட்டுப்போயின. லண்டனில் பாதிரிகள் காதலிகள் சமேதராய் உணவருந்தினர். தீய ஒழுக்கத்தில் பிறந்த அவர்களுடைய குமாரர்களையே சர்க்கார் அதிகாரிகள் பாதிரிகளாக்கினார்கள்.

இக்காலத்தில் இருந்த இங்கிலாந்து இராணி காரோலைன் (1683-1737) ஒரு நாஸ்திகராயிருந்தார். இது விஷயம் யாருக்கும் தெரியாது ஆனால் இதை அக்கால நடப்புகளால் சுலபமாய் ருசுப்படுத்த முடியும் இராணியின் அரசாங்க அதிகாரிகளிலும் அரசியல் வாதிகளிலும் பெரும்பான்மையோர் பகுத்தறிவுக் கொள்கைக்காரர்கள். இராணி தாம் இறக்குங்காலையில் கிறிஸ்தவ மதக்கோட்பாட்டின் படி பாபமன்னிப்பு வாங்கிக்கொள்ள வெறுத்து மறுத்து விட்டார். இவ்விஷயங்கள் இராணி கிறிஸ்துமதத்தை விலக்கி யிருந்தார் என்று விளக்கமாகக் காட்டுகின்றன. "நவீனப் பகுத்தறிவியக்கத்தினரின் சரித்திர அகராதி" என்னும் என்னுடைய நூலில் இது விஷயமாக நான் காட்டியிருக்கும் ருசுக்கள் முடிவானவை. இராணி காரோலைனும்

அவர் காலத்திருந்த மிகப்பெரிய அரசியல் வாதிகளும் பகுத்தறிவுக்கொள்கையினராயிருந்திருக்கின்றார்கள்.

ஆரம்ப காலத்தில் நாஸ்திகர்கள் ஏக ஈஸ்வரவாதிகள் என்று கூறப்பட்டனர், அவர்கள் கடவுள் விஷயத்தில் நம்பிக்கையுடையவர்கள். ஆனால் அவர்கள் அற்புதங்கள், தீர்க்க தரிசனம் முதலியவைகளில் கொள்ளப்படும் நம்பிக்கைகளை வெறுப்பார்கள். இக்காரணங்களால் அவர்கள் கிறிஸ்துமதத்தைப் புறக்கணித்து விட்டார்கள்.

நவீன இலக்கியத்தில் ஏக ஈஸ்வரவாதிகளுக்கும், சாதாரண ஆஸ்திகர்களுக்கும் சில குழப்பம் இருந்து வருகிறது. உண்மையாய்க் கூறுமிடத்து, கடவுளிடத்தில் நம்பிக்கையுடைய எந்த மனிதனும் ஆஸ்திகனுவான். தீர்க்க தரிசன மதத்தில் அவனுக்கு நம்பிக்கை இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அவன் ஆஸ்திகன் தான். ஒரு கிறிஸ்தவன் ஒரு ஆஸ்திகன். ஏக ஈஸ்வரவாதி கடவுளிடத்திலும், அழிவின்மையிலும் நம்பிக்கை உடையவன். ஆனால் அவன் எல்லா மதங்களையும் இயற்கையாக வளர்ந்தவையென்று மதிப்பவன். ஆதிகாலத்தில் பகுத்தறிவு கொள்கையினரை மதத்துரோகிகள் என்றும், நம்பிக்கையற்றவர்கள் என்றும், நாஸ்திகர்கள் என்றும் பெயரிட்டழைத்து வந்தார்கள். எல்லாரும் முக்கியமாய் ஞாபகத்தில் வைக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அது என்னவென்றால் படித்த மக்களிடத்தில் தான் சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக கிறிஸ்துமத எதிரிகள் இடைவிடாது அதிகமாக இருந்து வந்திருக்கிறார்கள் வன்பதுதான். அச்சடிக்கும் வசதியும் கல்வியும் அதிகமாக அதிகமாக கிறிஸ்துமத எதிரிகளின் கூட்டமும் பெருகிற்று. சீர்திருத்தக்காலத்திற்குமுந்தி நாஸ்திகம் வெகு அரிதாக இருந்தது என்றபெருமை பேசிக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் மூன்று விஷயங்களை எளிதாய் மறந்து விடுகிறார்கள். நாஸ்திகர்கள் கழுவேற்றப்பட்டு எரிக்கப்பட்டனர். பாதிரிக் கூட்டத்தார்களைத் தவிர மற்ற ஜனங்களுக்குக் கல்வி கிடையாது. படிப்பதற்கு அக்காலத்தில் புஸ்தகங்கள் கிடையா. கல்வி பரவவும் அச்சுப்புஸ்தகங்கள் பெருகவும் நாஸ்திகமும் அவைகளுக்கு ஏற்றவாறு வளரலாயிற்று. வர்த்தகமும் கைத்தொழிலும் உலகத்தில் அபிவிருத்தி யானதில் நடுத்தர வகுப்பினர் அதிகமாக உண்டானார்கள். வியாபாரிகள், டாக்டர்கள், நியாயவாதிகள், உயர்தர குமாஸ்தாக்கள், அரசியல்வாதிகள்; இலக்கிய வித்வான்கள் கலைஞர்கள் முதலியவர்கள் அதிகமானார்கள். ஆங்கில ஏக ஈச்சுர வாதிகளின் நூல்கள் இவர்களிடையே பரவலாயின. மான்டேனி எழுதிய நேர்த்தியான நாஸ்திகம் இடையிடையே பிரகாசித்த வியாசங்களும் நாஸ்திகத்தைப்பகிரங்கமாய் வெகு நன்றாய் எழுதின. பேயல் என்பவரின் "அகராதி" என்னும் புஸ்தக விஷயங்களும் அவர்களுக்காக மொழிபெயர்க்கப் பட்டன.

விஞ்ஞான சாஸ்திரம் மக்களுடைய எண்ணங்களை அதிகமாக மாற்றுவதற்கு முன்னமேயே நாஸ்திகம் பலமாக ஸ்தாபிதம் பெற்றிருக்கிறது. பிரான்ஸ் தேசத்தில் மலைகளின் உச்சியில் சில கிழிஞ்சில்கள் பதிந்து கிடந்ததை வால்டேருக்குக் காட்டினார்கள். அவ்விஷயத்தின்உண்மையை அவர் அறிந்திருந்தால், பைபிளைக்கொல்லும் ஒரு புதிய ஆயுதமாக அதை உபயோகித்திருப்பார். ஆனால் அக்கிழிஞ்சில்கள் பழைய காலத்து யாத்திரீகர்களால் ரோமுக்குப் போகும் வழியில் தங்கள் தொப்பிகளிலிருந்து நழுவவிடப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் அபிப்பிராயம் கூறினர்.

ஆனல் நாம் வால்டேர் என்னும் பெரியாரைப்பற்றி பேசு முன், ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் தெரிந்திருக்கவேண்டிய நாஸ்திகப் பெருக்கத்தைப் பற்றி நாம் குறிப்பிடவேண்டியிருக்கிறது. அமெரிக்கச் சரித்திரத்திலே சுதந்தரயுத்த காலத்தில் மிகப் பிரபலமானவர்களெல்லாம் வால்டேரைப்போலவே ஏகீச்சுரவாதிகளாயும் அவர்களில் சிலர் லோகாயதர்களாகவும் இருந்தார்கள்- தாமஸ்பேனி என்பவர் நாஸ்திக சரித்திரத்தில் இரண்டாவது பெரியவர். ரூசிவெல்ட் அறியாமையினல் அவரை "அசுத்தம் பிடித்த சிறிய நாஸ்திகன்" என்பது வழக்கம். அவர் கடவுளை எவ்வளவு ஆர்வத்தோடு விசுவாசித்தாரோ அவ்வளவு ஆர்வத்தோடு அவர் கிறிஸ்து மதத்தை வெறுத்துத்தள்ளினர். பெஞ்சமின் ப்ராங்கினின் என்பாரும் சந்தேகமில்லாமல் ஏகீச்சுரவாதி. இங்கிலாந்து தேசத்து ஏகீச்சுரவாதிகளுடைய நூல்களிலிருந்தேதான் தன் புதியகருத்துக்களைப்பெற்றதாக அவரே கூறுகிறார். வாஷிங்டனும், ஜெப்பர்சன் என்பாரும் அநுபவத்தில் நாஸ்திகர்கள் தான்.

"அமெரிக்காவில் சுதந்தர யுத்தம் நடந்த காலத்தில் தலைவர்களாயிருந்த அரசியல் வாதிகளெல்லாம் சந்தேகமில்லாமல் ஏகீச்சுர வாதிகளாகவே யிருந்தார்கள். அதுவே உண்மை அதுவே யாருக்கும் வெளிப்படையாகத் தெரிந்தவிஷயம்." என்று "என்சைக்ளோபீடியா ப்ரிட்டானிக்கா" என்னும் நூல் கூறுகிறது.

மகா ப்ரீடெரிக் என்னும் ப்ரஷிய அரசன் அவனுடையகாலத்தில் ஐரோப்பாவிலேயேமிகப்பெரிய மன்னன். அவன் ஏகீச்சுரவாதிதான். சீர்திருத்தத்திற்குப் பிறகு தோன்றின பயங்கரமான மத யுத்தத்தால் ஜெர்மனியின் முன்னேற்றம் தடையுற்றது. பதினெட்டாவது நூற்றாண்டில் தேசம் அமைதியுற்று செழிப்புற்றது. அவகாசமுள்ள ஒரு நடுத்தரவகுப்பினர் தோன்றி அதிகமாகிக் கொண்டு போயினர். அவர்களுக்குப் படிப்பில் அதிக பிரியம் இருந்து வந்தது. அதே அளவுக்கு நாஸ்திகமும் வளர்ந்தது. மற்ற விடங்களிலும் நாஸ்திகம் அப்படியே வளர்ந்திருக்கிறது. ஜெர்மனியில் மகா அறிஞர்களான கவிஞர்களும தத்துவசாஸ்திரிகளும்தோன்றினர்கள். கோயத்தீஸ், ஷில்லர்ஸ், காண்ட்ஸ் என்றவர்கள் தோன்றி நாஸ்திகத்தை மிக நன்றாகப் பிரசாரஞ்செய்து, அதை மேலும் மேலும் மதததோடு சம்பந்தப்படுத்தினர்கள், ஆனால் அதைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் பேசுவோம்.

இந்தச் சமயத்தில் பிரான்ஸில் ஜனங்களுக்கு ஓரளவு சுதந்தரம் கிடைத்திருந்தது. ப்ராட்டஸ்டண்ட் மதத்தினர் விரோதிகளான ஜெஸ்யூட்கள் தங்கள் அதிகாரங்களைத் தகாத வழிகளில் கெட்ட காரியங்களுக்கு உபயோகித்த காரணத்திற்காக ஊரைவிட்டு துரத்தப்பட்டனர். மற்றவிடங்களைப்போலவே மனிதர்கள் தங்கள் மதச்சண்டைகளால் சலிப்படைந்தார்கள். இங்கிலாந்தில் கத்தோலிக்கர்களும் புராட்டஸ்டண்டுகளும் சண்டை போட்டுக்கொண்டது போல பிரான்ஸில் ஜெஸ்யூட்களும், ஜான்ஸனிஸ்ட்களும் கடுமையாகச் சண்டை செய்து கொண்டிருந்தார்கள்.

(தொடரும்.)

## தூத்துக்குடி.

### பிராமணரல்லாதார் வாலிபர் சங்கம்.

இவ்வூர் பிராமணரல்தாதார் வாலிபர் சங்கத்தின் பொதுக்கூட்டம். அதன் தலைவர் தோழர் கூ-கா-ஆ-பெரியசாமி அவர்கள் தலைமையில் நாகம்மாள் சமதர்ம வாசகசாலையில யத்தில் 17-11-34ந்தேதிஇரவு8மணிக்கு நடைபெற்றது.

தலைவர் கூட்டத்தின்நோக்கத்தை முன்னுரையாகக் கூறுகையில் இந்தியசட்டசபைத் தேர்தலில் நம் கக்ஷி தோற்றுவிட்டது பற்றி வருந்தியதோடு எல்லாரும் ஒற்றுமைப்பட்டு மாகாண சங்கத்தைப் பலப்படுத்த முயற்சி செய்யவேண்டுமென்று வற்புறுத்திப்பேசினர்.

தோழர்கள் எஸ். எ. நடராஜன், கெ-அமிர்தபாண்டியன், பி-எஸ்-சண்முகம், எம்-வைகுண்டம் ஆகியவர்கள் ஜஸ்டிஸ் கக்ஷியின் தற்கால நிலைமை என்பது பற்றிப் பேசியபின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### தீர்மானங்கள்.

1. "பிராமணரல்லாத வாலிபர்களின் எழுச்சிக்குக் காரணஸ்தரும், அதற்காக அரிய சேவைசெய்த வகுமான தோழர் ஜெ. என். ராமநாதனவர்கள் மரணத்திற்கு இக்கூட்டம் தங்கள் துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது."

2. "ஜஸ்டிஸ் கக்ஷியில் ஒற்றுமைக்குறைவு நிலவிவருவதற்குவருந்தியும், இப்போது கக்ஷியைச் சீர்திருத்தியமைத்து டிசம்பரில் கூடும் நிர்வாகஸ்தர்கள் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. ரா. அவர்களின் திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், தமிழ்தினசரி யொன்று ஏற்படுத்தி தகுந்த பிரசாரம் செய்ய வேண்டுமென்றும் ஷை கட்சியின் தலைவர்களைக்கேட்டுக் கொள்கிறது." எனக் காரியதரிசி எழுதுகிறார்.

## கோவை அருந்ததியர்

### மகா ஜனசங்கம்.

### தோழர் S. N. பொன்னைய கவுண்டருக்குப்பாராட்டு.

18-11-34ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு ஷை சங்கத்தின் கூட்டம் ஒன்று நடைபெற்றது அது சமயம் பலர் "ஒழுக்கம்" என்பதுபற்றிப்பேசினர்கள். பின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

"தோழர் எஸ். என். பொன்னையகவுண்டர் அவர்கள் கோவை முனிசிபல் சேர்மனுகத்தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு இக்கூட்டம் பாராட்டுகிறது"

பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிந்ததென சே. தன்னுசிஎழுதுகிறார்.

### நன்கோடை.

சேலம் சுயமரியாதைச்சங்கத்தார்கள், 11-11-34ந் தேதி பகுத்தறிவில் சுயமரியாதைப்பாவலர் தோழர் தி. அ. வேங்கடசாமி அவர்கள் விடுத்தவேண்டுகோளின் படி விதவாவிவாகப்பெண்மணியான தோழர் சுப்பாரெட்டியார்—சுப்பம்மாள் அவர்கள் பிரசவ வசதிக்காக ரூபாய் 5—0—0ன்கொடை யளித்திருக்கிறார்களெனநமக்குத் தெரிவிக்கிறார்கள்.

## தோழர் ராஜப்பா வெற்றி.

இம்மாதம் 19-11-34ந் தேதி திங்கட்கிழமையன்று காலை 10-30 மணி சுமாருக்கு தஞ்சை முனிஸிபல் சேர்மென் எலக்ஷன் நடந்தது. ஜமீன்தார் தோழர் பி. எஸ். ராஜப்பா அவர்கள் அதிக வோட்டுகள் பெற்று சேர்மெனுகத் தேர்ந்தெடுக்கப் பட்டார் என நமது நிருபர் எழுதுகிறார்.


## மணமகள் தேவை.

மாதம் ஒன்றுக்கு 200ரூபாய் சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கும் 28 வயதுள்ள ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த கனவான் ஒருவருக்கு ஒரு அழகுள்ள பெண் தேவை.

பெண் வாலிப விதவையாய் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விலாசம்:—

K. V. V.

c/o Pahutharivu, Erode.

## பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

(சார்லஸ் T. கோர்ஹாம் மொழிபெயர்ப்பு)

இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

(பெர்ட்டிரண்ட்ரசல் மொழிபெயர்ப்பு.)

இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

### மதம் என்றால் என்ன?

(ராபர்ட் G. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

### கடவுள்.

(ராபர்ட் ஜி. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில்உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின்தன்மைகளையும், உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும்விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட்பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

(பெர்ட்டிரண்ட் ரசல் மொழிபெயர்ப்பு)

இந்நூல் மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

(இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில், தான்கடவுளைப்பற்றிக்க வலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

### பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். விலை அணா 4

### 'குடி அரசு' கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், குடிஅரசில்எழுதிய தலையங்கங்களையும், பலமகாநாடுகளில்பேசியபேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

### பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(பாதிரி சேனிக்யூ மொழிபெயர்ப்பு.)

இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும் பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது 1-ம்பாகம். விலை அணா 3.

### பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவை இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 3.

### மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இதில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள பேதங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. இதில் சகல விதமான மூடநம்பிக்கைகளும், விபரமான பதில்கள் இருக்கின்றன. சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

ஷை இரண்டாம்பாகம்

சுமார் 115 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M.A. மொழிபெயர்ப்பு

இதில் பிரமச்சரியம் என்னும் பெயரால் பல பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)
விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உபரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.
விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.
விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.
அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். எ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.
விலை அணா 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலை அணா $\frac{1}{2}$.

## மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

## சோதிடப் புரட்டு

விலை அணா 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா $\frac{1}{2}$.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.


Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.